بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

وَلَقَدْ نَصَرَكُمُ اللهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 10

இதழ் 36&37

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரீ கமரீ 1447 - ரபீயுல் அவ்வல் 11 - 18 ★ ஹிஜ்ரீ ஷம்ஸி 1404 - தபூக் 04 - 11 ★ 04 - 11 செப்டம்பர் 2025

## அல்லாஹ்வின் கட்டளை

اُولٰٓئِكَ لَهُمْ

نَصِيْبٌ مِّمَّا كَسَبُوْا ؕ

وَاللّٰهُ سَرِيْعُ الْحِسَابِ ○

பொருள்

**இவர்கள் சம்பாதித்ததற்கு உரிய நல்ல கூலி இவர்களுக்கு உண்டு. அல்லாஹ் மிக விரைவில் கணக்குத் தீர்ப்பவன் ஆவான்.**

(2:203)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## ஏராளமான ஆலிம்கள் இந்த அமைப்பை எதிர்த்தனர் என்று கூறப்படுகின்றது. இது தவறாகும் இறைவன் தனது அறைகூவல் மற்றும் வாதத்துடன் எமக்கு ஆதரவாக அறிவுசார் அற்புதங்களை காட்டி எதிரிகளில் ஆலிம் எவரும் இல்லை என்பதை நிரூபணம் செய்து விட்டான்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

### அறிவுசார் அற்புதம்

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறினார்கள்:

அறிவுசார் அற்புதமே பெரும் அற்புதமாக இருக்கின்றது. ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) அவர்களுடைய மாபெரும் அற்புதம் என்பது தற்போது வரை நிலைபெற்றிருக்கக் கூடிய திருக்குர்ஆன் ஆகும்.

ஹஸ்ரத் ஸாஹிப் அவர்கள், (பீர் மஹர் அலீ ஷாஹ்) கோல்டவீ போன்ற ஆலிம்களுக்கு எதிரில் பிரசுரம் வெளியிட்டு எழுதிய தஃப்ஸீர் ஃபாத்திஹாவில் இந்த குறிப்பு உள்ளது.

அன்னார் (அலை) கூறினார்கள்: ஆலிம் என்பவர் அறிவால் கண்டறியப்படுகிறார். நமது எதிரிகளில் உள்ளபடியே ஆலிம் எவரும் இல்லை. ஒருவர் கூட இல்லை. அவ்வாறிருந்திருந்தால் போட்டியில் பங்கேற்று சொற்செறிவும், பொருட்செறிவும் நிறைந்த அரபியில் தஃப்ஸீர் எழுதி தாங்கள் ஆலிம்கள் என்பதை அவர்கள் ஏன் நிரூபணம் செய்யவில்லை? நீர் பார்வையற்றவர் ஆவீர் என்று ஒற்றைக் கண் கொண்ட ஒருவரிடம் கூறினால் அவர் கோபப்படுகிறார். ரோஷம் கொள்கிறார்; தாம் பார்வையுடையவர் என்பதற்கான ஆதாரத்தை கொடுக்கும் வரை பொறுமை செய்வதில்லை. தாங்கள் ஆலிம்கள் ஆவோம் என்பதை அந்த மக்கள் தமது அறிவை வெளிப்படுத்தி நிரூபணம் செய்ய வேண்டும். கூறினார்கள் : ஏராளமான ஆலிம்கள் இந்த அமைப்பை எதிர்த்தனர் என்று கூறப்படுகின்றது. இது தவறாகும். இறைவன் தனது அறைகூவல் மற்றும் வாதத்துடன் எமக்கு ஆதரவாக அறிவுசார் அற்புதங்களை காட்டி எதிரிகளில் ஆலிம் எவரும் இல்லை என்பதை நிரூபணம் செய்து விட்டான். ஆலிம்கள் நம்மை எதிர்க்கின்றனர் என்ற இந்த விஷயம் தவறாகும். (மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 84. காதியான் பதிப்பு 2018-ம் ஆண்டு)

## நிச்சயமாக உலகில் ஏராளமான கண்டுபிடிப்பாளர்களும் படைப்பாளிகளும் காணப்படுகின்றனர். ஆனால், அவர்களின் கண்டுபிடிப்புகள் இறைவனின் கண்டுபிடிப்புகளுக்கு எதிரில் எந்த உண்மைத்துவமும் கொண்டிருப்பதில்லை

وَالَّذِيْنَ هُمْ عَلٰى صَلَوٰتِهِمْ يُحَافِظُوْنَ

(23:13-18)

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் மேற்குறிப்பிட்ட வசனங்களுக்கான விளக்கவுரையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

பௌதீக படைப்பின் இறுதியில் அல்லாஹ் கூறுகின்றான்: فَتَبَارَكَ اللّٰهُ اَحْسَنُ الْخَالِقِيْنَ

எல்லாவற்றையும் விட சிறந்த முறையில் படைக்கக் கூடிய அந்த இறைவன் எவ்வளவு அருளுக்குரியவன் ஆவான்.

இதே வசனம் ஆன்மிகப் படைப்புடனும் தொடர்பு கொண்டுள்ளது. அதாவது ஆன்மிகத்தில் முன்னேற்றமடைந்து, முன்னேற்றமடைந்து இந்த அந்தஸ்தை பெற்று விடுகின்றார். அப்போது அவருக்கு ஒரு புதிய ஆன்மிக பிறப்பு அருளப்படுகின்றது. அது அனைத்து மனிதர்களுக்கும் ஆச்சரியத்திற்குரியதாக தென்படுகின்றது. மேலும் அதனைக் கண்டு ஒவ்வொரு நபரும் வல்ல இறைவனை புகழும் நிர்ப்பந்தத்திற்கு ஆளாகி விடுகின்றார்.

இந்த வசனத்துடன் ஒரு வரலாற்று சம்பவத்திற்கும் தொடர்பு உள்ளது. அதனை இங்கு எடுத்துரைப்பது அவசியமானதாக தோன்றுகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வஹீயை எழுதக் கூடிய ஒரு நபர் இருந்தார். அன்னார் (ஸல்) மீது வஹீ இறங்கும்போதெல்லாம் அவரை அழைத்து அன்னார் (ஸல்) எழுத வைப்பார்கள். ஒருநாள் அன்னார் (ஸல்) இதே வசனத்தை அவரைக் கொண்டு எழுத வைத்துக் கொண்டிருந்தார்கள். அன்னார் (ஸல்) ثُمَّ اَنْشَاْنٰهُ خَلْقًا اٰخَرَ என்ற இடத்தை அடைந்தபோது, அவரது வாயிலிருந்து அவரையும் அறியாமல்

فَتَبَارَكَ اللّٰهُ اَحْسَنُ الْخَالِقِيْنَ

என்று வெளிப்பட்டு விட்டது. அப்போது, இதுவே வஹீ ஆகும்; இதனை எழுதுங்கள் என்று

இதன் தொடர்ச்சி 9-ம் பக்கம் ......

## நபிமொழி

### பொய் சத்தியம் செய்பவர்களிடம் அல்லாஹ் கோபம் கொள்வான்

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பொய் சத்தியத்தின் மூலமாக ஒருவருடைய செல்வத்தை அபகரித்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் எவர் சத்தியம் செய்தாரோ அவரிடம் கோபம் கொண்ட நிலையில் அவரை அல்லாஹ் சந்திப்பான்.

விளக்கம்: ஹஸ்ரத் ஸைனுல் ஆபிதீன் வலியுல்லாஹ் ஷாஹ் ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் ஸைது பின் ஸாபித் (ரலி) அவர்களின் சம்பவத்தை இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் முஅத்தாவில் பதிவு செய்துள்ளார்கள். அன்னாருக்கு அப்துல்லாஹ் பின் மதீஃ (ரஹ்) அவர்களுடன் ஒரு விவகாரத்தில் சண்டை ஏற்பட்டது. மேலும், தீர்ப்பிற்காக மதீனாவின் அமீர் மர்வான் பின் ஹகீம் அவர்களிடம் சென்றார்கள். ஹஸ்ரத் ஸைது பின் ஸாபித் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சொற்பொழிவு மேடையில் சத்தியம் செய்ய வேண்டும் என்று அன்னார் விரும்பினார்கள். அதற்கு, நான் எனது இடத்தில் இருந்தே சத்தியம் செய்வேன் என்று அன்னார் (ரலி) கூறினார்கள். அதற்கு, மர்வான் அவர்கள் கூறினார்கள்: இல்லை ; எங்கு உரிமைக்கான உறுதியான தீர்ப்பு வழங்கப்படுமோ அங்கேயே செய்ய முடியும். ஆனால், எங்கு ஹஸ்ரத் ஸைது பின் ஸாபித் (ரலி) அவர்கள் இருந்தார்களோ அங்கு, தனது உரிமைக்கான கோரிக்கையில், தான் உண்மையில் இருப்பதாக சத்திய வாக்குமூலம் வழங்கினார்கள்.

* * * * * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**UK ஜல்ஸாவில் கலந்து கொண்டிருந்த கண்ணியத்திற்குரிய விருந்தினர்களின் கருத்துக்கள் &
காஸா பாலஸ்தீனத்தைச் சார்ந்த மதிப்பிற்குரிய அப்துல் கரீம் ஜமால் ஜவ்தா ஸாஹிப் மர்ஹூம் அவர்களின் நற்குறிப்பும் &
ஜனாஸா காயிப் தொழுகையும்**

இந்த மூன்று நாட்களும், பெரும் அருள்கள் நிறைந்தவையாகவும், அல்லாஹ்வின் அருள்களைக் காட்டும் நாள்களாகவும் இருந்தன அல்லாஹ் நம் மீது பெரும் கருணை காட்டியுள்ளான்; அதாவது இந்த மூன்று நாள்களில் அவன் தனது எண்ணற்ற அருள்களை நம் மீது பொழிந்தான்; மாநாட்டை எல்லா வகையிலும் அருள் நிறைந்ததாக ஆக்கினான்

இந்த முறை MTA உலகின் சுமார் 56 நாடுகளில் உள்ள 119 மையங்களுடன் மாநாட்டை இணைத்தது. இந்த இணைப்பின் மூலமாக இரு தரப்பினரும் ஒருவரையொருவர் பார்க்க முடிந்தது; நாங்கள் இங்கிருந்து அவர்களைப் பார்க்க முடிந்தது; அவர்கள் வெறுமனே தொலைக்காட்சி ஒளிபரப்பைக் கேட்கவில்லை. மாறாக, நேரடித் தொடர்பும் இருந்தது
எனவே இதுவும் அல்லாஹ்வின் அருள்களில் ஒரு மிகப் பெரிய அருளாகும். இதை அவன் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது பொழிந்துள்ளான். ஒரே சமூகமாக மாறும் இந்த காட்சி உலகில் வேறு எங்கும் காணக் கிடைக்காது

எல்லாப் பணிகளும் அல்லாஹ்வின் அருளால் நடந்தன ; இதில் நம்முடைய திறமை எதுவும் கிடையாது. மாறாக, இது அல்லாஹ்வின் அருளாகும்; அல்லாஹ் நமக்கு இந்த வாய்ப்பை வழங்கினான் ; மேலும் நம் பணிகளுக்கு அவன்தான் சிறந்த விளைவுகளைத் தந்தான் என்று பணியாளர்கள் நன்றி செலுத்த வேண்டும்.

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 01 ஆகஸ்ட் 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **ஸுஹூர்** மாதம் **01 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

கடந்த ஞாயிற்றுக்கிழமை அல்லாஹ்வின் அருளால் யூ.கே ஆண்டு மாநாடு தன் நிறைவை எட்டியது. இந்த மூன்று நாட்களும், பெரும் அருள்கள் நிறைந்தவையாகவும், அல்லாஹ்வின் அருள்களைக் காட்டும் நாள்களாகவும் இருந்தன. அல்லாஹ் நம் மீது பெரும் கருணை காட்டியுள்ளான்; இந்த மூன்று நாள்களில் அவன் தனது எண்ணற்ற அருள்களை நம் மீது பொழிந்தான்; மாநாட்டை எல்லா வகையிலும் அருள் நிறைந்ததாக ஆக்கினான். மாநாடு நல்லபடியாகவும், சிறப்பானதாகவும் முடிவடைந்தது. அல்லாஹ்வின் அருளால் வானிலையும் நன்றாக இருந்தது. அனைத்து நிகழ்ச்சிகளும் மிகவும் சுமூகமாக நிறைவடைந்தன.

மாநாட்டின் அடிப்படை நிகழ்வுகளான சொற்பொழிவுகள் மற்றும் பிற நிகழ்ச்சிகளைத் தவிர, தப்லீஃக் மற்றும் அறிவுசார்ந்த நோக்கங்களுக்காக பல்வேறு துறைகள் ஏற்பாடு செய்திருந்த கண்காட்சிகளும் அல்லாஹ்வின் அருளால் அந்நியர்கள் மீது மிகவும் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தின. தங்கள் அறிவை மேலும் பெருக்கிக் கொள்ள பல அஹ்மதிகளுக்கும் வாய்ப்பு கிடைத்தது. இதேபோல, MTA-வும் மாநாட்டு நிகழ்ச்சிகளின் இடைவேளைகளில் பல்வேறு அறிவுசார்ந்த நிகழ்ச்சிகளைக் காட்டி தகவல்களை காட்டியது. இது மக்கள் மீது மிகவும் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியது. மற்ற நாடுகளில் இருக்கும் அஹ்மதிகளும் இதை மிகவும் விரும்பினர்.இதிலும் பல புதிய விஷயங்கள் தெரிய வந்தன. அதே போன்று இந்த முறை MTA உலகின் சுமார் 56 நாடுகளில் உள்ள 119 மையங்களுடன் மாநாட்டை இணைத்தது. இந்த இணைப்பின் மூலமாக இரு தரப்பினரும் ஒருவரையொருவர் பார்க்க முடிந்தது; நாங்கள் இங்கிருந்து அவர்களைப் பார்க்க முடிந்தது; அவர்கள் வெறுமனே தொலைக்காட்சி ஒளிபரப்பைக் கேட்கவில்லை. மாறாக, நேரடித் தொடர்பும் இருந்தது. இது மிகவும் ஆழமான, நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்தத் தாக்கத்தை இங்கு இருந்தவர்கள் உணர்ந்தது மட்டுமின்றி-இங்குள்ள மக்களும் இதை மிகவும் விரும்பினர். பல்வேறு நாடுகளில் அமர்ந்து மாநாட்டைக் கேட்டவர்களின் உணர்வுகள் எவ்வாறானதாக இருந்தது என்றால், அவர்கள் மாநாட்டுத் திடலில் அமர்ந்து மாநாட்டைக் கேட்பது போலவே இருந்ததாக கூறினர். அவர்கள் ஆயிரக்கணக்கான மைல்கள் தொலைவில் அமர்ந்திருந்தனர். ஆனால், அல்லாஹ் இந்த ஊடகத்தின் மூலம் அவர்களுக்கு மாநாட்டைக் கேட்கும் நல்வாய்ப்பை வழங்கினான். தங்களை அங்கேயே இருப்பதாக அவர்கள் உணர்ந்தார்கள்.

இந்த புதிய கண்டுபிடிப்புகள் மூலம் உலகெங்கிலும் உள்ள அஹ்மதிகளை ஒன்றிணைத்துள்ளான். எனவே இதுவும் அல்லாஹ்வின் அருள்களில் ஒரு மிகப் பெரிய அருளாகும். இதை அவன் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது பொழிந்துள்ளான். ஒரே சமூகமாக மாறும் இந்த காட்சி உலகில் வேறு எங்கும் காணக் கிடைக்காது.

இந்த முறை பொதுவாக ஏற்பாடுகள் கடந்த ஆண்டுகளை விட மிகவும் சிறப்பாக இருந்ததாக பெரும்பாலான மக்கள் கூறியுள்ளனர். ஒரு சிறப்பான சூழல் நிலவியது. இவை அனைத்தும் அல்லாஹ்வின் ஒரு சிறப்பான அருளாகும். மாநாட்டில் அல்லாஹ்வின் சிறப்பான அருள்கள் இறங்கிக் கொண்டிருக்கின்றன என்பதை ஒவ்வொருவரும் அசாதாரணமாக உணர்ந்தார்கள்.

அல்லாஹ் கூறுகின்றான்: நீங்கள் அவனுக்கு நன்றி செலுத்தும் அடியார்களாக மாறுங்கள். நீங்கள் நன்றி செலுத்தும்போது, நான் என் அருள்களை உங்களுக்கு இன்னும் அதிகமாக வழங்குவேன். மேலும், அதிக அருள்களை உங்கள் மீது பொழிவேன்.

لَئِنْ شَكَرْتُمْ لَاَزِيْدَنَّكُمْ

என்று அல்லாஹ் கூறியுள்ளான். அதாவது நீங்கள் நன்றி செலுத்தினால், நன்றி செலுத்துபவர்களாக மாறினால், நான் உங்களுக்கு இன்னும் அதிகமாகத் தருவேன்.

எனவே அல்லாஹ்வின் அருள்களுக்கு மேலும் வாரிசாக திகழ நன்றி செலுத்துவது அவசியமாகும். அல்லாஹ் தன்னைப் பற்றி கூறும்போது, اِنَّ اللّٰهَ شَاكِرٌ عَلِيْمٌ
.
என்று கூறியுள்ளான்.

நிச்சயமாக அல்லாஹ் மிகவும் மதிக்கக் கூடியவனும், நன்கறிந்தவனும் ஆவான். அல்லாஹ்வுக்காக நன்றி என்ற சொல் பயன்படுத்தப்படும்போது அது மதித்தல் என்ற பொருளில் பயன்படுத்தப்படுகிறது. அல்லாஹ் நன்றி செலுத்துபவர்களை மதிக்கின்றான். அந்த மதிப்பின் காரணமாக அல்லாஹ் அவர்களுக்கு மேலும், மேலும் வழங்குகிறான். அல்லாஹ் எஜமானன் ஆவான். அவன் அடியார்களுக்கு நன்றி சொல்ல வேண்டியதில்லை. மாறாக, அவன் மதிப்பதே, அடியார்கள் செய்யும் நன்றிக்கு அவன் கொடுக்கும் கண்ணியமாகும். எனவே அவனுக்கு அறிவும் உண்டு; யார் உண்மையான நன்றி செலுத்துபவர் என்பதும் அவனுக்குத் தெரியும். நன்றி செலுத்துதல் உண்மையானதாக இருந்தால் அவன் மேலும் வழங்கிக் கொண்டே செல்வான். இது வெறும் வார்த்தைகளாக மட்டும் இருக்காமல் நன்றி செலுத்தும் ஓர் உணர்வு இருக்க வேண்டும். இந்த உணர்வை அல்லாஹ் தன் அருளால் ஜமாஅத்தில் அதிகமாக உருவாக்கியுள்ளான்.

அவன் அதை மேலும் அதிகாரிக்கச் செய்வானாக!

கலந்து கொண்ட அனைவரும் இங்கு நினைவில் கொள்ள வேண்டிய ஒரு விஷயம் என்னவென்றால், அவர்கள் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் அதே வேளையில், பணியாற்றி பணியார்களுக்கும் நன்றி செலுத்த வேண்டும். பணியாளர்களின் பணிகளில் அல்லாஹ் எளிமையை ஏற்படுத்தியதற்கு நன்றி செலுத்துங்கள். அவர்களின் சிரமங்களை நீக்கி, அவர்களின் ஒவ்வொரு பணியிலும் முன்னேற்றத்தை ஏற்படுத்தி, மிக அதிகமான மக்களுக்கு தொண்டாற்றுவதற்கு வாய்ப்பளித்தான். இதன் மூலம் பங்கேற்பாளர்களுக்கு அதிக வசதிகளும், சிறந்த ஏற்பாடுகளும் கிடைத்தன.

இந்த ஆண்டு அல்லாஹ்வின் அருளால் - நான் ஏற்கனவே மாநாட்டின் கடைசி நாளில் கூறியது போன்று, வருகை 46000-க்கும் அதிகமாக இருந்தது. உண்மையில், லஜ்னா பின்னர் அளித்த அறிக்கையின்படி, அவர்களின் எண்ணிக்கை சரியாக கணக்கிடப்படவில்லை ; அவர்கள் பின்னர் அனுப்பிய எண்ணிக்கை அறிக்கையைச் சேர்த்தால், ஆண்கள் மற்றும் பெண்களின் மொத்த எண்ணிக்கை 50,000 ஆகிறது. ஏனெனில், அவர்கள் இருப்பத்தி ஐந்தாயிரம் பேர் இருந்ததாகக் கூறுகிறார்கள். எனவே இந்த ஐம்பதாயிரம் பங்கேற்பாளர்களும், பணியார்கள் மூலம் அல்லாஹ் தங்களுக்கு வசதிகளை ஏற்படுத்தியதற்கு அவர்கள் நன்றி செலுத்த வேண்டும். அவர்களுக்கு போக்குவரத்து விஷயத்தில் எந்த சிரமமும் ஏற்படவில்லை ; உணவு விஷயத்தில் எந்த சிரமமும் ஏற்படவில்லை ; மாநாட்டு நிகழ்ச்சிகளைக் கேட்பதில் எந்த சிரமமும் ஏற்படவில்லை. அவர்களின் மற்ற பல்வேறு தேவைகளும் பூர்த்தியாகிக் கொண்டிருந்தன. தங்குமிட ஏற்பாடும் மிகவும் பொருத்தமானதாக இருந்தது. விருந்தினர்கள் ஜமாஅத் தங்குமிடங்களில் தங்கியபோது அவர்களுக்கும் சிறந்த ஏற்பாடு செய்யப்பட்டது.

எனவே இந்த எல்லாப் பணிகளும் அல்லாஹ்வின் அருளால் நடந்தன ; இதில் நம்முடைய திறமை எதுவும் கிடையாது. மாறாக, இது அல்லாஹ்வின் அருளாகும். அல்லாஹ் நமக்கு இந்த வாய்ப்பை வழங்கினான் என்றும், நம் பணிகளுக்கு சிறந்த விளைவுகளைத் தந்தான் **என்றும் எங்கு பணியாளர்கள் நன்றி செலுத்துவார்களோ அங்கு** பங்கேற்பாளர்களும் **இவ்வாறு நன்றி செலுத்த வேண்டும். அல்லாஹ் தங்களுக்காக எப்படி ஏற்பாடுகளை செய்தான் என்று எண்ணி நன்றி ஷெலுத்த வேண்டும். அதாவது பல்வேறு மட்டத்தைச் சேர்ந்த பல்வேறு கல்வித் தரங்களைக் கொண்ட எண்ணற்ற மக்கள் இரவு பகலாக அல்லாஹ்வின் திருப்திக்காக தன்னார்வத் தொண்டு செய்து தங்கள் டியூட்டிகளை நிறைவேற்றினர்.**

பல்வேறு துறைகளில், நான் ஏற்கனவே கூறியது போன்று ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகியோரின் மாநாட்டுத் திடலில் ஆயிரக்கணக்கான சிறுவர், சிறுமிகள், இளம் பெண்கள், இளைஞர்கள், பெண்கள் மற்றும் ஆண்கள் பணியாளர்களாக இருந்தனர். அனைவரும் தன்னலமின்றி தொண்டாற்றும் நல்வாய்ப்பைப் பெற்றனர். இவர்கள் அனைவரும் பங்கேற்பாளர்களின் நன்றிக்கு உரியவர்கள் ஆவார்கள்.

இதேபோல், கனடா மற்றும் ஆஸ்திரேலியாவிலிருந்தும் காதிம்கள் பெருமளவில் வந்திருந்தனர். அவர்கள் மாநாட்டிற்கு முன்பும், மாநாட்டின்போதும் மாநாட்டுப் பணிகளில் உதவி செய்தனர். மாநாட்டிற்குப் பிறகும் அப்புறப்படுத்தும் பணிகளில் உதவி செய்கிறார்கள். எனவே அல்லாஹ் அவர்கள் அனைவருக்கும் நற்கூலி வழங்குவானாக!

ஒரு ஹதீஸில் வருகிறது; அல்லாஹ் தன் அடியார்களிடம், எனது இன்ன அடியான் உங்கள் மீது ஓர் உபகாரம் செய்தான்: ஆனால் நீங்கள் அவனுக்கு நன்றி செலுத்தவில்லையே! என்று கூறுவான். அதற்கு, அடியான், அல்லாஹ்வே! நீ தான் என் மீது பேரருள் புரிந்தாய்; நான் உனக்கு நன்றி செலுத்தினேன் ;செலுத்திக் கொண்டிருக்கின்றேன் என்று கூறுவான்.

அதற்கு, இல்லை! நான் அந்த அடியான் மூலமாகவே உன் மீது பேரருள் புரிந்தேன் ; உன் காரியங்கள் நடந்தன. எனவே அந்த அடியானுக்கு நன்றி செலுத்துவதும் அவசியம் என்று அல்லாஹ் கூறுவான்.

ஆக, தனக்காக தன் அடியார்கள் செய்யும் பணிகளை அல்லாஹ் எந்த அளவு மதிக்கின்றான் என்றால், அவர்களுக்கு நன்றி செலுத்துங்கள் என்று கூறுகின்றான். **நாம் அல்லாஹ்வின் அடியார்களுக்கு நன்றி செலுத்துபவர்களாக ஆக வேண்டும் என்று தான் நம்மிடமும் விரும்புகின்றான்.** அப்போதுதான் முழுமையான நன்றி செலுத்தப்படும். இந்த விஷயத்தை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.

நான் ஏற்கனவே கூறியது போல, இந்த பணியாற்றிய மக்கள் அனைவரும் நன்றிக்கு உரியவர்கள் ஆவர். அவர்களின் ஆர்வத்தைக் கண்டு அந்நியர்கள் மீதும் இதன் பெரும் தாக்கம் ஏற்படுகிறது. அவர்கள் ஈர்க்கப்படுகிறார்கள். எப்படி சிறுவர்கள் கூட கடமையாற்றுகிறார்கள்; தண்ணீர் கொடுக்கிறார்கள் என்றும் (அவர்கள் ஆச்சரியப்படுகிறார்கள்) ரொட்டி சுடுகிறார்கள்; விருந்தோம்பல் செய்கிறார்கள்;பல்வேறு இடங்களில் சுத்தம் செய்கிறார்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் எவ்வாறு பணியாற்றுகிறார்கள்? என்பதையும் பார்த்து அவர்கள் ஆச்சரியப்படுகிறார்கள்.

விருந்தினர்களிடமிருந்து ஒன்றல்ல; பல தாக்கங்கள் கிடைத்துள்ளன. இங்கு வந்த விருந்தினர்களிடமிருந்து பெறப்பட்ட தாக்கங்களில், பலர் நாங்கள் பல்வேறு பணியாளர்களிடம் நீங்கள் என்ன வேலை செய்கிறீர்கள் என்று கேட்டோம்; அவர்கள் வேலை செய்யும் விதத்தைப் பார்த்து, அவர்கள் ஒருவேளை கூலித் தொழிலாளிகளாக இருக்கலாம் என்று நினைத்தோம். தான் ஒரு நிறுவனத்தில் அதிகாரி என்று ஒருவர் கூறினார்; ஒருவர், தான் கற்பிப்பதாகக் கூறினார்; ஒருவர், தான் PHD மாணவராக இருக்கின்றார்; ஒருவர், PHD பட்டம் பெற்றிருக்கின்றார்.

ஆக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு தொண்டாற்றுவதற்காகவும், அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காகவும் தங்களை முன்னிறுத்தும் இத்தகைய உணர்வு கொண்டவர்கள் இருக்கிறார்கள்.

எனவே இந்த விஷயம், பங்கேற்பாளர்கள் அனைவரும் (பணியாற்றிய) இம்மக்களுக்கு நன்றி செலுத்த வேண்டும் என்பதைக் கோருகிறது. பணியாளர்களும், ஆண்டு முழுவதும் தப்லீஃக் செய்யவோ அல்லது ஜமாஅத்தின் தூதுச் செய்தியை அதற்கான உரிமையை நிறைவேற்றியவாறு கொண்டு சேர்க்கவோ வாய்ப்பு கிடைப்பதில்லை என்றாலும், இங்கு மாநாட்டில் கடமையாற்றும்போது, பல்வேறு மக்களை சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கிறது என்பதற்கும் அவர்கள் நன்றி செலுத்த வேண்டும். இங்கு அந்நியர்களும் வருகிறார்கள். ஜமாஅத்தைப் பற்றி ஆரம்ப கட்ட அறிமுகம் மட்டுமே உள்ளவர்கள் பல்வேறு நாடுகளிலிருந்து வருகிறார்கள்; (அஹ்மதிகளாகிய) இம்மக்கள், சொல்வதுபோல் உண்மையிலேயே இருக்கிறார்களா? என்று அவர்கள் பார்க்கவும் செய்கிறார்கள். பல்வேறு தொழில்களைச் சேர்ந்த அந்தப் பணியாளர்கள் இப்படி வேலை செய்வதையும், ஒவ்வொருவரும் ஒரு சாதாரண தொழிலாளியின் வேலையைச் செய்வதையும் பார்க்கும்போது, அது அவர்கள் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இது ஒரு மௌனமான தப்லீஃக் ஆகும். அவ்விஷயத்தை அவர்கள் வெளிப்படுத்தியும் விடுகின்றார்கள். அந்த வெளிப்பாட்டின் சில மாதிரிகளை நான் முன்வைக்கின்றேன். ஏனெனில், எண்ணற்ற முன்னுதாரணங்கள் உள்ளன. அல்லாஹ் மக்களின் உள்ளங்களில் எப்படி தாக்கத்தை ஏற்படுத்துகின்றான்? என்று எண்ணற்ற மக்கள் தம் கருத்துக்களை எனக்கு அனுப்புகிறார்கள். அவர்கள் மாநாட்டின் சொற்பொழிவுகளால் ஈர்க்கப்படும் அதே வேளையில், நம் பணியாளர்களின் பணிகளாலும், சிறு பிள்ளைகளின் நடவடிக்கைகளாலும் ஈர்க்கப்படுகிறார்கள். ஆக, இது ஒரு மௌனமான தப்லீஃக்கும், இஸ்லாத்தின் உண்மையான செய்தியும் ஆகும். இது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மூலம் மக்களுக்குச் சென்றடைகிறது.

இதேபோல, புதிதாக வருபவர்கள், அதாவது ஜமாஅத்தில் இணைபவர்கள் அல்லது முதல் முறையாக இங்கு வருபவர்களும் ஊக்கமடைகிறார்கள். எப்படி மரியாதையுடனும், கண்ணியத்துடனும் தங்களுக்கு விருந்தோம்பல் செய்யப்படுகிறது என்பதையும் இங்குள்ள மக்கள் எப்படி தங்களுடன் பழகுகிறார்கள் என்பதையும் அவர்கள் பார்க்கின்றார்கள். ஆக, இது மிகவும் முக்கியமான விஷயமாகும். இதற்காக நாம் அனைவரும் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டும். நான் ஏற்கனவே கூறியது போன்று, சில கருத்துக்களை இப்போது முன் வைக்கின்றேன்.

Roderick Island -ன் காவல்துறை உதவி ஆணையர், மிஸ்டர் மனோஜ் லோசன் அவர்கள் இங்கு வந்திருந்தார். அவர் கூறுகிறார்:

நான் காவல்துறை ஆணையாளராகவும், டிவிஷனல் கமாண்டராகவும் பல அரசு நிகழ்ச்சிகளிலும், சமூக நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றுள்ளேன். ஆனால், மாநாட்டின் நாட்களில் நான் கண்டது உண்மையிலேயே ஒரு முன்மாதிரியான விஷயம் ; அமைப்பு மற்றும் ஒழுங்கமைப்பின் ஒரு விலைமதிப்பற்ற பாடம் அது. பத்தாயிரம் தன்னார்வலர்களின் இருப்பு ஒரு வினோதமான அற்புதம் ஆகும். ஒவ்வொருவரும் இணையற்ற அர்ப்பணிப்புடன் தோளோடு தோள் சேர்த்து தொண்டாற்றினர். நான் ஒரு தன்னார்வலரைப் பார்த்தேன். அவருடைய கை காயமடைந்து கட்டப்பட்டிருந்தாலும் கூட புன்னகையுடன் மற்றவர்களுக்கு சேவை

செய்து கொண்டிருந்தார். மருத்துவர்கள், IT வல்லுநர்கள், தொழிலதிபர்கள், PHD பட்டம் பெற்றவர்கள் ஆகியோரை சந்தித்தேன். அவர்கள் அனைவரும் பணிவுடனும், உறுதியுடனும் சேவைப் பணிகளைச் செய்து கொண்டிருந்தனர். எங்களை ஆண்டு மாநாட்டுக்கு அழைத்துச் சென்ற ஓட்டுநரிடம் அவருடைய தொழிலைப் பற்றிக் கேட்டபோது,அவர் பயோகெமிஸ்டிரியில் PHD செய்திருப்பதாகக் கூறினார். அது என் மீது மிகவும் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. ஒரு கம்யூனிட்டி யின் நோக்கத்திற்காக இத்தகைய கொள்கைப் பிடிப்பையும் பணிவையும் நான் என் வாழ்நாளில் ஒருபோதும் அனுபவித்ததில்லை. நிகழ்ச்சி மிகவும் நன்றாக இருந்தது; பாதுகாப்பு ஏற்பாடு மிகவும் சிறப்பாக இருந்தது.ஒவ்வொரு விஷயமும் என் மீது ஆழமான, நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. நான் என் நாட்டிற்குத் திரும்புகிறேன்; ஆனால், என் சக காவல்துறை அதிகாரிகளுடனும், குடும்ப உறுப்பினர்களுடனும் பகிர்ந்து கொள்வதற்கு இங்கிருந்து நான் எடுத்துச் செல்லும் நிறைய நினைவுகள் என்னிடம் இருக்கின்றன.

பெல்ஜியத்தைச் சேர்ந்த ஸத்தூர் ஸாஹிப் (HansNoot) எனும் ஒரு விருந்தினர் - இவர் ஒரு மனித உரிமை அமைப்பான HRWF-இன் பிரதிநிதி ஆவார். மாநாட்டில் கலந்து கொண்டு கூறினார்: இந்த அசாதாரணமான கூட்டத்தின் ஒரு பகுதியாக இருப்பது எனக்கு உண்மையான மகிழ்ச்சியாக இருந்தது. இது ஒரு மறக்க முடியாத அனுபவமாக இருந்தது மட்டுமின்றி, உங்கள் அன்பான வரவேற்பு மற்றும் சிறந்த விருந்தோம்பல் காரணமாக இது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தும் அனுபவமாகவும் மாறியது. இவ்வளவு பெரிய அளவில் ஆயிரக்கணக்கான மக்கள் பல நாட்கள் பங்கேற்ற ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்வது நிச்சயமாக ஒரு அசாதாரண வெற்றி, தன்னார்வலர்களுடன் உரையாடியபோது, ஒவ்வொரு துறையும் பல மாதங்களுக்கு முன்பே ஆயத்தங்களைத் தொடங்குவதை அறிந்தேன்.

பொறுப்புகள் ஒதுக்கப்பட்டு, தனிநபர்களுக்கு மிகவும் தெளிவாகப் பயிற்சி அளிக்கப்படுகிறது. நிர்வாகத் திறமை மட்டுமின்றி, அதன் பின்னால் இருந்த நல்லொழுக்க அடிப்படையும் என்னைக் கவர்ந்தது. தர்பிய்யத் கொடுக்கக் கூடியவர்கள் விதிகளைப் பற்றி விளக்குவதுடன் மனித குல சேவை, பணிவு மற்றும் ஒவ்வொரு விருந்தினருக்கும் மதிப்பளித்தல், கண்ணியமளித்தல் போன்ற விஷயங்களையும் வளர்த்தனர். இந்த விஷயங்கள் ஒவ்வொரு பொறுப்பிலும் தெளிவாகத் தெரிந்தன.

கார் பார்கிங்கில் வழிகாட்டிகள், கழிப்பறைகளை சுத்தம் செய்பவர்கள், உணவு பரிமாறுபவர்கள், Registration செய்பவர்கள் அல்லது பாதுகாப்புத் துறையில் பேக்குகளை சோதனையிடுபவர்கள் என ஒவ்வொருவரும் தங்கள் பொறுப்பை கண்ணியத்துடனும், பரிவுடனும் நிறைவேற்றினர். ஜமாஅத் அல்லாத விருந்தினராக, நான் மிகவும் ஒருங்கிணைந்த அமைப்பைக் கண்டேன். எந்தவொரு பெரிய பிரச்சனையையோ, மோதலையோ நான் பார்க்கவோ கேள்விப்படவோ இல்லை. இது உங்கள் ஜமாஅத் அமைதி மற்றும் அகிம்சையின் நடைமுறைப் பயிற்சியை ஆழமாக உள்வாங்கியுள்ளது என்பதைக் காட்டுகிறது.

அடுத்து அவர் கூறுகிறார்: நான் கண்ட ஒரு சிறப்பம்சம், கல்வி மற்றும் அறிவுசார் வளர்ச்சிக்கு உங்கள் ஜமாஅத் கொடுக்கும் முக்கியத்துவம் ஆகும். சிறப்பாகச் செயல்பட்ட மாணவர்களின் அறிவிப்புகள் மாநாட்டின்போது செய்யப்பட்டன. இது தனிப்பட்ட வளர்ச்சிக்கும், கல்விக்கும் மரியாதை அளிப்பதன் பிரதிபலிப்பாகும்.

அடுத்து கூறுகிறார்: நான் மாநாட்டின் போது பலமுறை உண்மையான பரஸ்பர அனுதாபத்தின் வெளிப்பாடுகளைக் கண்டேன். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளிடம் காட்டும் பரிவு, குழுத் தலைவர்கள் தங்கள் அணியினரைக் கவனித்துக் கொள்வது, தன்னார்வலர்கள் விருந்தினர்களுக்கு தாமாகவே முன்வந்து உதவுவது, அவர்கள் அந்நியர்களாக இருந்தாலும், உங்களுக்கு என்ன சேவை செய்ய வேண்டும்? என்று கேட்பது, பொதுவாக, மக்கள் தங்கள் பொறுப்புகளுக்கு மேலாக தொண்டாற்றுவதைக் கண்டேன். அவர் கூறுகிறார்: உங்களுடைய ஜமாஅத் ஆன்மிகப் புத்துணர்ச்சி மற்றும் விரிவான அறிவுசார் திறனுடன் இணைந்திருப்பதைக் கண்டு நான் மகிழ்ச்சியுடன் ஆச்சரியப்பட்டேன். உங்கள் நம்பிக்கையின்படி, அல்லாஹ் இன்றும் மனிதர்களுடன் பேசுகிறான். அல்லாஹ் தன் பண்பை விட்டுவிடவில்லை. மாறாக, நல்ல தலைமை மற்றும் இறையறிவிப்பு மூலம் அல்லாஹ் தன் வேலையைத் தொடர்கிறான் என்பதை அறிந்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.

பிரேசிலின் மாகாண நாடாளுமன்ற உறுப்பினர், யூரீ மௌரா (Yuri Moura) கூறுகிறார்: மாநாட்டில் இஸ்லாத்தின் ஞானமிக்க போதனைகளை அறிந்து எனக்கு மனமார்ந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. தொழுகைகளின் காட்சி மிகவும் ஆத்மார்த்தமாக இருந்தது. அதேபோல், பாடப்பட்ட கவிதைகள் உள்ளத்தில் இறங்கிக் கொண்டே சென்றன. இது எனக்கு ஒரு மறக்க முடியாத அனுபவமாக இருந்தது. விருந்தோம்பல் குறித்த கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் சொற்பொழிவும் என் மீது தாக்கத்தை ஏற்படுத்தியது. இது ஒரு தற்காலிக ஏற்பாடாக இருந்தது என்பதும், எனினும், 46,000 மக்கள் இங்கு கூடினர் என்பதும் ஆச்சரியமாக இருந்தது. சிறு குழந்தைகள் தாங்களாகவே மக்களுக்கு தண்ணீர் கொடுக்கும் சேவையை செய்ய விரும்பியதை என் கண்களால் கண்டேன். படைப்பினங்களுக்கு தொண்டாற்றுவதும், தியாகத்தின் இந்த உணர்வும் தர்பிய்யத் பெற்ற உள்ளங்களில் மட்டுமே இருக்க முடியும். அஹ்மதிகள் உண்மையிலேயே நேசிக்கக் கூடியவர்கள் என்பதையும், மரியாதையுடைய, களங்கமற்ற மக்கள் என்பதையும், இந்த ஜமாஅத் மனிதர்களுக்கும் நாடுகளுக்கும், மதங்களுக்கும் இடையில் பிளவுகளை ஏற்படுத்துவதற்குப் பதிலாக அன்புடனும், நேசத்துடனும் உள்ளங்களை இணைக்க கற்பிக்கிறது என்பதையும் கண்டு நான் ஈர்க்கப்பட்டேன். அஹ்மதிய்யா ஜமாஅத் தான் கற்பிப்பதை செயல்படுத்திக் காட்டுகிறது என்பது முற்றிலும் உண்மையாகும். இது உலகிற்கு ஓர் எடுத்துக்காட்டு ஆகும்,

அவர் கூறுகிறார்: இந்த விஷயங்களைப் பார்த்து என் உள்ளத்திற்கு பெரும் பலம் கிடைத்துள்ளது; மனிதகுலத்தைப் பற்றிய என் எண்ணங்கள் இன்னும் மேம்பட்டுள்ளன.உங்கள் மார்க்கம் என் மார்க்கத்திலிருந்து வேறுபட்டிருக்கலாம்; ஆனால், எவ்வாறிருப்பினும், இது எவ்வாறான ஒரு மார்க்கம் என்றால், இது நிச்சயமாக மனிதர்களைப் பிரிப்பதில்லை. மாறாக இணைக்கிறது. நீங்கள் எப்போதும் இந்த ஒளியின் கலங்கரை விளக்கமாக பிரேசிலிலும், உலகெங்கிலும் பாதுகாப்பாக இருப்பதற்கும், வளர்ச்சியடையவும் வாழ்த்துகிறேன். நான் மக்களிடம் - குறிப்பாக பிரேசிலியர்களிடம் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு வந்து, அஹ்மதிகள் உலகெங்கிலும் ஆன்மிக, மார்க்க, கல்வி மற்றும் மனிதாபிமானத் துறைகளில் எப்படிப் பங்காற்றுகிறார்கள்? என்பதைப் பார்க்குமாறு கூற விரும்புகிறேன்.

சிலியைச் சேர்ந்த ரோசிதோ கார்டெஸ் ஸாஹிபா இந்த ஆண்டு, மாநாட்டில் கலந்து கொண்டார். இவர் கத்தோலிக்க பல்கலைக்கழகத்தில் தீயோலஜி மற்றும் இன்டர்ஃபெயித் துறையின் பேராசிரியை ஆவார். பல்வேறு மார்க்கங்களுக்கிடையிலான நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டுள்ளார்கள். அவர் கூறுகிறார்: இவ்வளவு சிறப்பாகவும், ஆழமாகவும் ஒவ்வோர் அம்சமும் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மாநாடு ஓர் இணையற்ற நிகழ்ச்சியாகும்.

அவர் முதல் நாள், கழிப்பறைக்குச் செல்லும் தேவையைத் தவிர்ப்பதற்காக முடிந்தவரை குறைவாகச் சாப்பிடவும் குடிக்கவும் முயன்றதாகக் கூறினார். உலகக் கண்காட்சிகளில் நடப்பது போல் இவ்வளவு பெரிய கூட்டத்தில் கழிப்பறைகள் அசுத்தமாகவும், பயன்படுத்த முடியாதவையாகவும் இருக்கும்; சிரமத்தை எதிர்கொள்ள நேரிடும். அதே நிலைதான் இந்த மாநாட்டிலும் இருக்கும் என்று அவர் நினைத்தார். ஆனால், தேவை ஏற்பட்டபோது சென்று பார்த்தபோது அவர் மிகவும் ஆச்சரியப்பட்டதாகக் கூறினார். அவர் பிறகு தம்முடன் இருந்த நம்முடைய பிரதிநிதியிடம், உங்களுடைய தூய்மையின் தரம் இணையற்றதாக இருந்தது. கழிப்பறைகள் யாரும் பயன்படுத்தாதது போல் (சுத்தமாக) இருந்தன என்று கூறினார். குளியலறைகள் அசுத்தமாக இருந்ததாக சிலர் முறையீடு செய்திருந்தனர். ஆனால், முறையீடு செய்தவர்களோ நம் அஹ்மதிகள்!

நான் பலமுறை அஹ்மதிகளிடம், துப்புரவுப் பணியாளர்களுக்கு நீங்களே உதவ வேண்டும்; பயன்படுத்திய பின் நன்றாக சுத்தம் செய்து விட்டு வர வேண்டும் என்று கூறியுள்ளேன். ஒவ்வோர் அஹ்மதியும் இதில் கவனம் செலுத்தினால் இந்தத் தரம் மேலும் மேம்படும்.

இதேபோல், அவர் ஜமாஅத்தின் பரஸ்பர சகோதரத்துவம் மற்றும் ஒற்றுமையைப் பற்றிக் குறிப்பிடுகையில், லத்தீன் அமெரிக்காவிலிருந்து வந்த ஜமாஅத் அல்லாத விருந்தினர்களாகிய நாங்களும் உங்கள் பண்பில் கலந்து விட்டோம். உங்கள் மாநாட்டுச் சூழலின் தாக்கத்தால் எங்களிடமும் அதே உணர்வு ஏற்பட்டுள்ளது. மாநாட்டுக்கு முன்பு நாங்கள் ஒருவரையொருவர் அறிந்திருக்கவில்லை. ஆனால், மாநாட்டின் காரணமாக இப்போது நாங்கள் ஒரு குடும்பம் போல் உணர்கிறோம் என்றார்.

பெனினிலிருந்து சாபி ஆதம் தாரோ (Chabi Adam Taro) என்ற ஒரு பெண்மணி விருந்தினராக வந்திருந்தார். சாபே தாரோ ஸாஹிபா சமூக நலத்துறை அமைச்சராக இருந்துள்ளார். தற்போது, தேசிய சட்டமன்றத் தலைவரின் அரசியல் தொழில்நுட்ப ஆலோசகராக பணியாற்றுகிறார்.

அவர் கூறுகிறார்: நான் ஆண்டு மாநாட்டில் பங்கேற்பது இதுவே முதல் அனுபவம். அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்த இந்த ஆன்மிகக் கூட்டத்தில் கலந்து கொண்டதில் நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். எனக்கு மிகவும் உற்சாகத்துடன் வரவேற்பு அளிக்கப்பட்டது. சிறந்த ஒழுங்கமைப்பு இருந்தது. அனைத்து குழுக்களும் தத்தமது பங்கை ஆற்றின. கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் தூதுச் செய்தி இந்த நிகழ்ச்சியை இன்னும் உயர்த்தி விட்டது. நான் இங்கிருந்து நிறைய கற்றுக் கொண்டு செல்கிறேன். ஆண்டு மாநாடு ஒற்றுமையின் ஒரு வெளிப்பாடாகவும் உள்ளது. இங்கு பல்வேறு மொழிகள், கலாச்சாரங்களைச் சேர்ந்த சகோதர, சகோதரிகள் ஒன்று கூடி அல்லாஹ் மற்றும் திருக்குர்ஆனின் ஒரே தூதுச் செய்தியில் இணைந்திருக்கின்றனர்.

பிறகு அவர் கூறுகிறார்: நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தேசிய சட்டமன்ற தலைவர் சார்பாகவும், பெனின் மக்கள் சார்பாகவும், நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எவர்கள் மிகவும் உற்சாகத்துடன் எனக்கான ஏற்பாடுகளை செய்தார்களோ, என்னை வரவேற்றார்களோ, என்னுடன் நல்ல முறையில் நடந்து கொண்டார்களோ அவர்களுக்கும் (நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்).

அர்ஜென்டினாவைச் சேர்ந்த காஸ்டன் அக்மஃபோ (Gaston Ocampo) என்பவர் - இவர் தற்போது போர்ச்சுக்கல் நாட்டில் வசிக்கிறார். (ஐபிடிஏஎல்) IPDAL என்ற அமைப்பின் ஒரு பிரபலமான சிந்தனையாளராக இருக்கின்றார். மேலும் அதன் ஜெனரல் செகரட்டரியாக பணியாற்றி வருகின்றார். ஒரு கத்தோலிக்கராக இருந்தபோதிலும், இஸ்லாத்தில் ஆர்வம் கொண்டவர். அவர் கூறினார்: மாநாட்டின்போது, உங்கள் ஜமாஅத்தின் பல சிறப்புகளைக் காணும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. எல்லாவற்றிற்கும் மேலாக, உங்கள் இளைஞர்கள் தங்கள் மார்க்கத்துடன் இணைந்திருப்பதும், தங்கள் போதனைகளை உறுதியாகப் பின்பற்றுவதும் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. எங்கள் சமூகத்தில் பெரும்பாலும் பெயரளவிலான கிறிஸ்தவர்களே உள்ளனர். அவர்கள் தங்கள் போதனைகளின்படி செயல்படுவதில்லை. எங்கள் கத்தோலிக்க நிகழ்ச்சிகளில் பெரும்பாலும் வயதானவர்களே அதிகமாக இருப்பார்கள். ஆனால், உங்கள் மாநாட்டில் பங்கேற்பாளர்கள் மட்டுமின்றி, முக்கியமான தொண்டுகளும் இளைஞர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஒருபுறம் இதைப் பார்த்து எனக்கு மிகவும் நன்றாக இருந்தது; மறுபுறம் ஒரு கத்தோலிக்கனாக, உங்களிடம் இருக்கும் ஒழுக்கத்தின் தரம் எங்களிடம் இல்லையே என்று வெட்கப்பட்டேன். உங்கள் கலீஃபாவிற்கு இவர்கள் கொடுக்கும் கண்ணியம், மரியாதை ஆகியவையும் அவர்களுடனான தொடர்பின் வெளிப்பாடும் ஒரு முன்மாதிரியாகும்.

இத்தாலியிலிருந்து வந்திருந்த ஜார்ஜியா யாக்கோலே (Giorgia Lacuele) என்ற விருந்தினர் இருக்கின்றார். இத்தாலியில் உள்ள ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் அதிகாரப்பூர்வ தலைமைப் பொறுப்பின் இயக்குனர் ஆவார். அவர் கூறுகிறார்:

இது ஒரு மார்க்கக் கூட்டமாக மட்டுமே இருக்கும் என்று நான் நினைத்தேன். ஆனால், நான் நினைத்தது தவறு. ஆண்டு மாநாடு ஓர் உண்மையான உணர்ச்சிகரமான அனுபவம் ; அது ஆன்மாவில் ஆழமான தடத்தை பதிக்கிறது. நம்பிக்கை, சகோதரத்துவம் மற்றும் ஆன்மிகம் ஆகியவை ஒன்றாக உணரப்பட்டு, பின்னிப் பிணைந்திருக்கும் ஓர் உலகிற்குள் நுழைந்தது போன்று உணர்கிறேன். உலகின் பல்வேறு மூலைகளிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் ஒரே நோக்கத்திற்காக ஒன்று கூடியிருப்பதைக் காண்பதும், அல்லாஹ்வுடனும், மனிதகுலத்துடனும் (தம்) உறவை வலுப்படுத்தக் கூடியிருப்பதைக் காண்பதும் என்னிடம் மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய அனுபவமாக இருந்தது. என்னை மிகவும் கவர்ந்த விஷயம், அற்புதமான ஒழுங்கமைப்பும், அவை அனைத்தும் தன்னார்வலர்களால் செய்யப்படுவதும் ஆகும். அவர்களில், குழந்தைகள், இளைஞர்கள் ஆண்கள், மற்றும் பெண்கள் என அனைவரும் இருந்தனர். அனைவரும் மிகவும் அன்பாகவும், நல்லொழுக்கத்துடனும் இருந்தனர். இது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உண்மையான செய்தியான அமைதி, தொண்டு மற்றும் தன்னலமற்ற அன்பின் ஒரு செயல் வரைபடமாக இருந்தது. என் இதயத்தில் பதிந்த, எப்போதும் நினைவிருக்கும் ஒரு தருணம், நான் பங்கேற்க வாய்ப்பு கிடைத்த துஆ நிகழ்ச்சியாகும். அந்த அமைதி மற்றும் ஆழமான தொடர்பால் நிறைந்து இருந்தது. என்னைப் பொருத்த வரை ஆண்டு மாநாடு ஒரு நிகழ்ச்சி மட்டுமின்றி சுய பரிசோதனை செய்து கொள்ளும் ஓர் அழைப்பாகவும், மற்றவர்களிடம் நடந்து கொள்வதைப் பற்றி சிந்திக்கும் ஓர் அழைப்பாகவும் இருந்தது.

அந்நியர்கள் மீதும் அதன் தாக்கம் இவ்வாறு ஏற்படுகிறது.

கேப் வெர்டே (Cape Verde Island) தீவின் தலைநகரான பிராயாவின் துணை மேயர் ஃபெர்னாண்டோ பிண்டோ (Fernanda jorge Taraves Pinto)மாநாட்டிற்கு வந்திருந்தார். அவர் கூறுகிறார்:

மாநாட்டைப் பற்றிய என் உணர்வுகளை வார்த்தைகளால் வெளிப்படுத்த முடியாது. எனக்கு 65 வயது; நான் உலகின் பெரிய பெரிய மாநாடுகளில் கலந்து கொண்டிருக்கின்றேன். ஆனால், (இந்த) மாநாட்டைப் போன்ற பெரிய மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட மாநாட்டில் நான் எங்கும் கலந்து கொண்டதில்லை. இங்கு 46000 க்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டனர்; ஒவ்வொருவரும் பரஸ்பரம் அன்புடனும், நேசத்துடனும் சந்தித்துக் கொண்டனர். அனைவரும் ஒரு குடும்பத்தின் அங்கமாகத் தோன்றினர். இந்நேரத்தில் உலகில் அமைதியை ஏற்படுத்துவதற்கு இறைவனின் தேவை உள்ளது. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தூதுச் செய்தி எங்கள் நாட்டிலும் பரவ வேண்டும் என்றும், எங்கள் தலைவர்களுக்கும் இந்த செய்தி சென்றடைய வேண்டும் என்றும் நான் விரும்புகிறேன். எங்கள் நாட்டிலும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மிஷன்கள் திறக்கப்பட வேண்டும்; நான் இமாம் ஜமாஅத்தின் அனைத்து சொற்பொழிவுகளையும் கேட்டேன். அவை என் இதயத்தைத் தொட்டன. இந்த தூதுச் செய்தியை உலகின் அனைத்து தலைவர்களும் கேட்க வேண்டும். தங்கள் பொறுப்புகளைப் பற்றி அவர்களுக்கும் உணர்வு ஏற்பட வேண்டும்.

பெலீஸைச் சேர்ந்த புதிதாக பைஅத் செய்த ஈத்தன் மாரியா நோஸ் ஸாஹிப் கூறுகிறார்:

மாநாட்டில் கலந்து கொண்டும், கலீஃபாவைச் சந்தித்தும் என் நம்பிக்கை மிகவும் அதிகரித்துள்ளது. நான் என் கடைசி மூச்சு வரை கலீஃபாவிற்கு நன்றியுள்ளவனாக இருப்பேன். நான் கிலாஃபத்தை நேசிக்கிறேன். மேற்கத்திய சமூகம் நமக்குக் கற்பிப்பது என்னவென்றால், யாராவது உங்களுக்காக ஏதாவது செய்தால், செய்ய விடுங்கள். ஆனால், இங்கு ஒவ்வொருவரும் அதிக தொண்டாற்றி அதிக அருளைப் பெற வேண்டும் என்ற முயற்சியில் இருக்கின்றார்கள்.

ஒவ்வொருவரும் தம் ஆற்றலை விடவும் மேலாக உதவி செய்கிறார். வயதையோ, இனத்தையோ பொருட்படுத்தாமல் அனைவரும் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துவதையும், தொண்டாற்ற விரும்புவதையும் கண்டு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. மக்களுடன் உரையாடியபோது, இங்கு மக்கள் தங்கள் தொழில்களை விட கித்மத்தே கல்க்-க்கு (படைப்பினங்களுக்கு தொண்டாற்றுவதற்கு) அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்பது தெளிவாக தெரிந்தது. அவர்கள் தங்கள் வேலைகளை விட்டு விட்டு இந்த அருள்களைப் பெறுவதை மிகவும் முக்கியமானதாகக் கருதுகிறார்கள். மாநாட்டிற்குப் பிறகு என் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றம் ஆச்சரியமானது. கிலாஃபத்தின் மதிப்பை அறியாததிலிருந்து என் உள்ளத்தில் கலீஃபாவின் மீது அதீத அன்பு ஏற்படும் வரையிலான பயணம் உண்மையிலேயே குறிப்பிடத்தக்கது. முதலில் எனக்கு கிலாஃபத்தின் மீது (பெரும்) கண்ணியம் இருக்கவில்லை. ஆனால், இப்போது கிலாஃபத்தின் மீது பெரும் நேசம் ஏற்பட்டுள்ளது. பெலீஸில் சில மக்கள் ஒன்று கூடினாலும், சண்டை வந்து விடும். ஆனால், இங்கு கிட்டத்தட்ட எங்கள் நகரத்தின் மக்கள்தொகை அளவுக்கு 50,000 பேர் கலந்து கொண்டிருந்தும் முழுமையான அமைதி நிலவியது. மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட ஏற்பாடு இருந்தது. ஒவ்வொரு ஏற்பாடும் மிக நுணுக்கமாக சிந்திக்கப்பட்டிருந்தது. குழந்தைகள் தண்ணீர் கொடுப்பது, இளைஞர்கள் பார்க்கிங்கில் வாகனங்களை வரிசைப்படுத்துவது, உணவு விநியோகம் மற்றும் சுத்தம் செய்வது என ஒவ்வொருவரும் முழு அர்ப்பணிப்புடனும், அன்புடனும் வேலை செய்கிறார்கள். இவை அனைத்தையும் காண்பது மிகவும் ஈர்க்கக் கூடியதாக இருந்தது. உயர் உத்தியோகம் செய்யக் கூடியவர்கள் கூட எந்தவிதமான அகங்காரமும் இன்றி தொண்டில் ஈடுபட்டுள்ளனர். ஏனெனில், அவர்கள் தொண்டாற்ற விரும்புகிறார்கள் ; அல்லாஹ்வின் திருப்தியைப் பெற விரும்புகிறார்கள். இளைஞர்களுடன் பேசியதில், அனைவரும் கல்விக்கு அதிக கவனம் செலுத்துகிறார்கள் என்ற விஷயமும் தெரிய வந்தது.

செக் குடியரசிலிருந்து ஒரு மூத்த பேராசிரியர், பீட்டர் பெலிகான் என்பவர் மாநாட்டில் கலந்து கொண்டார். செக் குடியரசில் , இஸ்லாமியவியல் மற்றும் சட்டவியல் நிபுணர் ; அரசு மட்டத்தில் பல்வேறு துறைகளில் பதவி வகிக்கிறார் ; பல்வேறு இதழ்கள் மற்றும் செய்தித்தாள்களில் கட்டுரைகள் எழுதுகிறார்; இவர் அடிப்படையில் சுன்னத் ஜமாஅத்தைச் சேர்ந்த முஸ்லிம் ஆவார். அவர் கூறுகிறார்: இது எனது இரண்டாவது மாநாடு ஆகும். முன்பு ஜெர்மனி மாநாட்டில் கலந்து கொண்டேன். முன்பு அங்கு கண்டதைப் போலவே இங்கும் மேலான தரத்தைக் கண்டேன். ஆனால்,

இங்கு கலீஃபாவின் இருப்பு ஒரு கூடுதல் சிறப்பாக இருந்தது. அது என் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. நான் உலகில் பல கூட்டங்களையும், கண்காட்சிகளையும் பார்த்திருக்கின்றேன். ஆனால், இந்த அளவிலான ஒற்றுமையையும், நேசத்தையும், அமைதியான சூழலையும் முதல் முறையாகப் பார்க்கிறேன். இங்கு ஒவ்வொருவரின் முகத்திலும் புன்னகையும், தொண்டாற்றும் மனப்பான்மையும் தெளிவாக தென்படுகிறது. இது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உயரிய தர்பிய்யத்தின வெளிப்பாடாகும். கலீஃபா அவர்களின் முதல் சொற்பொழிவும் எனக்கு எதிர்பாராத, ஆச்சரியமான அனுபவமாக இருந்தது. அவர்கள் மிகவும் யதார்த்தமாக அனைத்து விஷயங்களையும் பேசினார்கள். விருந்தினர்களின் இதயம் கண்ணாடி போன்றது; எவ்வாறு அவர்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று அவர்கள் பேசினார்கள். (அதன் பிறகு) மக்கள் இதன் பக்கம் கவனம் செலுத்தினார்கள்; உண்மையிலேயே விருந்தினரைக் கவனத்தில் கொண்டார்கள்.

அவர் கூறுகிறார்: பாதுகாப்பு ஏற்பாடுகளும் சிறப்பாக இருந்தன. எல்லா இடங்களிலும் மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் பணிகள் நடந்தன. எந்தவொரு தடையும் இன்றி இந்த முழுப் பணியும்; சுமூகமாக நடந்து கொண்டிருந்தது ஆச்சரியமாக இருந்தது. என்னைப் பொருத்தவரை, இந்த சகோதரத்துவ சூழலை தம் கண்களால் காணவும், நேசம் சகோதரத்துவம் மற்றும் அமைதி ஆகியவை இங்குள்ள காற்றில் எவ்வாறு கலந்துள்ளது என்பதைக் காணவும் மற்றவர்களும் கண்டிப்பாக இங்கு நேரில் வர வேண்டும். இது ஒவ்வொருவரும் குறைந்தபட்சம் ஒரு முறையாவது பெற வேண்டிய அனுபவம் ஆகும். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் எதிர்காலம் பிரகாசமாக இருக்கிறது என்பதை இந்த அனுபவம் என்னை நம்ப வைக்கிறது. இந்த மாநாடு என் உள்ளத்தில் இஸ்லாத்தைக் குறித்த புரிதலை மேற்கொண்டு ஆழமாகவும், பரந்ததாகவும் ஆக்கியுள்ளது. நான் சுன்னத் ஜமாஅத் முஸ்லிம் ஆக இருந்தாலும் அஹ்மதி சகோதரர்களை இஸ்லாத்தின் வட்டத்திலிருந்து வெளியேறியவர்களாக நான் ஒருபோதும் கருதியதில்லை. இங்கு எனக்கு பல்வேறு மொழிகளில் அஹ்மதி ஆலிம்களுடனும், சகோதரர்களுடனும் நேருக்கு நேர் உரையாட வாய்ப்பு கிடைத்தது. அவர்கள் மிகுந்த கலப்பற்றத் தன்மையுடன் ஜமாஅத்தின் கொள்கைகள் மற்றும் சித்தாந்தங்களைப் பற்றி எனக்குத் தெரிவித்தனர்.

இது எனக்கு ஒரு முஸ்லிமாக மட்டுமின்றி, செக் குடியரசில் ஒரு பேராசிரியராகவும் இருப்பது மிக முக்கியமானது. தன்னார்வலர்களிடமும் பேச எனக்கு வாய்ப்பு கிடைத்தது. அவர்களில் வயதானவர்களும் இருந்தார்கள்; இளைஞர்களும் இருந்தார்கள். இந்த சேவையை ஏன் செய்கிறீர்கள்? என்று நான் அனைவரிடமும் கேட்டேன். ஒவ்வொருவரின் பதிலும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாக இருந்தது; அதாவது, நாங்கள் இந்த சேவையை அல்லாஹ்வின் திருப்திக்காகவும், மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்காகவும், எங்களது ஆன்மிக வளர்ச்சி மற்றும் சீர்திருத்தத்திற்காகவும் செய்கிறோம் என்று கூறினர். ஒரு பணியாளர், கடந்த பதினைந்து ஆண்டுகளாக இந்தத் துறையில் தாம் தொண்டாற்றி வருவதாகவும், சிறுவயதிலிருந்தே ஒவ்வோர் ஆண்டும் மாநாட்டின் நாட்களில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு தொண்டாற்றுவதற்காக தன்னை அர்ப்பணித்து வருவதாகவும் தெரிவித்தார். இந்த தொண்டுகள் அனைத்தையும் அவர்கள் எந்த உலக ஆதாயமும், வெகுமதியும் இல்லாமல் செய்கிறார்கள். என் பார்வையில், இதுவே உயரிய ஆன்மிகப் பயிற்சியாகும்.இதை கிலாஃபத் அவர்களின் உள்ளங்களில் வேரூன்றச் செய்து விட்டது. அதனால்தான் ஒவ்வோர் ஊழியரும் கலப்பற்றத் தன்மை, தியாகம் மற்றும் அன்பின் உணர்வோடு தங்கள் தொண்டுகளை செய்கிறார்கள். ஒவ்வொரு வானிலையிலும், ஒவ்வொரு சூழ்நிலையிலும் தன்னலமற்ற முறையில் தங்கள் திறன்களை வழங்கத் தயாராக இருக்கும் இந்த உண்மையான தன்னார்வலர்களுக்காக எனது உள்ளத்தில் மிகுந்த மரியாதையும் பற்றும் உள்ளது.

அஹ்மதிய்யா ஜமாஅத் கல்வி மற்றும் கற்பித்தலுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறது என்பதைக் கண்டு ஒரு பேராசிரியராக எனக்கு மகிழ்ச்சியாகவும்,ஆச்சரியமாகவும் இருந்தது. நான் புத்தகக் கடைகளில் பல மணி நேரம் செலவிட்டேன். பல்வேறு புத்தகங்களை உன்னிப்பாகப் படித்தேன். அவற்றின் தரம், உள்ளடக்கம் மற்றும் கல்விசார் அணுகுமுறை மிகவும் சிறப்பானதாகவும் பாராட்டுக்குரியதாகவும் இருந்ததைக் கண்டேன். இதுவோர் அற்புதமான, தாக்கத்தை ஏற்படுத்தும் கல்விக்கு செய்யப்படும் தொண்டாகும். இவ்வாறே அவர்கள் உணர்வுகளையும், எண்ணங்களையும் கொண்டுள்ளனர்.

பிரெஞ்சு கயானாவிலிருந்து புதிதாக பைஅத் செய்த பெண்மணி, அமீனா மாலாசிங்கா என்பவர் கூறுகிறார்:

மாநாட்டின் போது இதயத்தைத் தொட்ட விஷயம், மக்களின் ஒழுக்கமும் அவர்களின் விருந்தோம்பலும்தான். நீங்கள் களைப்படைந்திருந்தால் உட்கார இடம் தேவைப்பட்டால், ஏற்கனவே அமர்ந்திருப்பவர்கள் உடனே எழுந்து தங்கள் இடத்தைக் கொடுப்பார்கள். ஒரு விசித்திரமான அமைதியையும், சுதந்திரத்தையும் உணர்ந்தேன். விவரிக்க இயலாத ஓர் ஆன்மிக சூழலும் இருந்தது.நான் கலீஃபாவைப் பார்த்து சந்தித்தபோது – அது அனைத்தையும் விட அதிக தாக்கத்தை ஏற்படுத்திய தருணமாக இருந்தது. அப்போது என் கண்களிலிருந்து தன்னிச்சையாகக் கண்ணீர் வந்தது.

ஆரம்பத்திலேயே கிலாஃபத்துடனான தொடர்பு மற்றும் நன்றியுணர்வின் இந்த வெளிப்பாடு, இறைவன் சார்பாகவே உருவாக முடியும் ; எந்த மனிதனாலும் உருவாக்க முடியாது.

பல்கேரியாவிலிருந்து புதிதாக பைஅத் செய்த பெண்மணி, எவ்லீனா ஸாஹிபா கூறுகிறார்: என் வீட்டில் நான் மட்டுமே அஹ்மதி. நான் அஹ்மதிய்யத்தை மிகவும் ஆழமாகப் படித்து, மூன்று வருட ஆராய்ச்சிக்குப் பிறகு ஏற்றுக் கொண்டேன். இது எனது முதல் யூ.கே மாநாடு. இதுவொரு மிகுந்த ஆன்மிக மாநாடாக இருந்தது. நான் நீண்ட நாட்களாகவே யூ.கே மாநாட்டை நேரில் காண இந்த வாய்ப்புக்காகக் காத்திருந்தேன். ஏனெனில், இது இங்குள்ள மிகப் பெரிய மாநாடு ஆகும். அத்துடன் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் நேரில் கலந்து கொண்டு உரையும் நிகழ்த்துகிறார்கள். இந்த அருளுக்குரிய நாட்களில், நான் ஓர் இணையற்ற ஆன்மிக சூழலை உணர்ந்தேன்; மேலும், அதன் அங்கமாக ஆகும் நல்வாய்ப்பு கிடைத்தது. இறைவனிடம் தம்மை மாய்த்துக் கொண்டவர்களுக்கு மத்தியில் இருந்ததனால், இறைவனுடனான எனது தொடர்பு இன்னும் உறுதியானது. சகோதரத்துவ உணர்வு, உயரிய நல்லொழுக்கம் மற்றும் ஆன்மிகத் தரம் ஆகியவை எல்லா விஷயத்திலும் தென்பட்டது. அவை என் உள்ளத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தின.

இந்த மகத்துவ மிக்க மாநாட்டை நடத்துவதற்காக அயராது உழைத்த அனைத்து பணியாளர்களுக்கும், தன்னார்வலர்களுக்கும் அமைப்பாளர்களுக்கும் நான் என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றி கூற விரும்புகிறேன். எனது அனுபவம் மிகவும் அற்புதமாக இருந்தது. எந்த அளவு நுணுக்கமான முறையில் விருந்தினர்களின் வசதியும், ஓய்வும் கவனத்தில் கொள்ளப்பட்டது என்பதைக் கண்டு நான் பெரும் தாக்கத்திற்குள்ளானேன். இந்த அருளுக்குரிய மாநாட்டின் நிறைவுக்குப் பிறகு நான் என் வீடு திரும்பும்போது, முன்பை விட உறுதியான நம்பிக்கையுடனும், சரியான அறிவுடனும், உண்மையான இஸ்லாத்துடன் எனது தொடர்பு உள்ளது என்ற உறுதியுடனும் திரும்புவேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் வாக்குறுதியளிக்கப்பட்ட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வருகையைப் பற்றி கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் ஆற்றிய உரை எனக்கு மிகவும் தாக்கத்தை ஏற்படுத்திய தருணமாகும். நான் ஏற்கனவே இந்த கருத்தை பற்றி சிந்தித்திருந்தாலும், கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் வார்த்தைகள் எனக்குப் புதிய அகப்பார்வையையும் இதற்கு முன்பு எனக்குத் தோன்றாத புதிய கோணங்களையும் காட்டின.

காத்தமுன் நபிய்யீனுக்குப் பிறகு யாரேனும் (நபி) வருவதற்கான சாத்தியக்கூறு உள்ளது என்று கூறப்படும்போது, சில எதிர்ப்பாளர்கள் சார்பாக எடுத்து வைக்கப்படும் குற்றச்சாட்டுகளுக்கும், சந்தேகங்களுக்கும் முழுமையான பதிலாகவும் சான்றுகளைக் கொண்ட பதிலாகவும் இந்த சொற்பொழிவு இருந்தது. இந்த சொற்பொழிவு எனது புரிதலை விரிவுபடுத்தியது; எனது அகப்பார்வையை கூர்மையாக்கியது; மேலும் கண்ணோட்டத்தை மேலும் ஒருங்கிணைத்தது. திருக்குர்ஆன் இறைவனிடமிருந்து வந்தது என்பதற்கான சான்றுகள் குறித்த மற்றொரு சொற்பொழிவும் என் உள்ளத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. இதுபோன்ற தற்கால ஆட்சேபனைகளுக்கு எவ்வளவு தர்க்க ரீதியாகவும், ஆதாரப்பூர்வமாகவும், தெளிவாகவும் பதிலளிக்கப்பட்டது என்பதைக் கேட்ட பிறகு எனக்கு மன அமைதி கிடைத்தது மட்டுமின்றி, இனிமேல் எந்தவொரு சபையிலும் திருக்குர்ஆனின் உண்மை மீது தாக்குதல் நடத்தப்பட்டால் நானும் அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு பதிலடி தருவேன் என்று ஒரு புதிய நம்பிக்கையும் ஏற்பட்டது.

இந்த ஒரு புதிய உணர்வுதான் அந்த மக்களிடையே உருவாகிறது.

பிரேசிலைச் சேர்ந்த ஒரு விருந்தினர், இகோர் லூகாஸ் என்பவர் ஒரு பத்திரிகையாளர் ஆவார். அதேபோல,

மாகாண நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளரும் ஆவார். அவர் கூறுகிறார்: மாநாட்டு நிகழ்ச்சிகளில் நேரத்தைக் கடைப்பிடித்தது பாராட்டத்தக்கது. இது மிகவும் சிறப்பான விஷயமாகும். அஹ்மதிய்யா ஜமாஅத்தினரின் விருந்தோம்பல் மற்றும் கலப்பற்றத் தன்மை ஆகியவை மிகவும் ஈர்க்கக்கூடியது ஆகும். உணவு முதல் குளியலறை பயன்பாடு வரை, போக்குவரத்து முதல் மாநாட்டு திடலுக்குள் நுழைந்து வெளியேறும் பாதைகள் வரை. விருந்தினர்களுக்கு எப்போதும் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இந்தச் சூழல் மனிதனுக்கு ஒற்றுமை மற்றும் தியாகத்தின் பாடத்தைக் கற்பிக்கிறது. உணவு வீணாவதைத் தவிர்க்க தீவிரமாக முயற்சி செய்யப்படுகிறது. ஆனால், உணவு மிகவும் தாராளமாக ஒவ்வொருவருக்கும் வழங்கப்படுகிறது என்பதும் என்னைக் கவர்ந்தது.

இந்தோனேசியாவைச் சேர்ந்த ஒரு விருந்தினர், கோமார் குல்தும் ஆவார்கள். இவர்கள் ஒரு பாதிரியார் ஆவார்கள். இந்தோனேஷியாவின் கம்பயூனியன் ஆஃப் சர்சஸ் என்ற அமைப்பின் சேர்மன் ஆகவும் இருந்துள்ளார். அவர் கூறுகிறார்: நான் அஹ்மதிய்யத்தை அறிந்திருந்தேன். ஆனால், அஹ்மதிய்யத் என்பது காதியான் எனும் ஒரு சிறிய கிராமத்தில் தொடங்கிய ஒரு ஆன்மிக இயக்கம்; இப்போது இது ஓர் உலகளாவிய ஆன்மிக இயக்கமாக மாறியுள்ளது என்பதை இந்த மாநாடு மூலம் நான் நன்றாகப் புரிந்து கொண்டேன். அல்லாஹ்வுடன் தொடர்பை ஏற்படுத்த வேண்டும் என்ற ஒரே உணர்வுடன் பல்வேறு நாடுகளிலிருந்து அஹ்மதிகள் வந்திருக்கிறார்கள் என்பதை நான் கண்டேன். அல்லாஹ்வுடனான மனிதனின் தொடர்பை உறுதிப்படுத்துவதில் அழுத்தம் கொடுக்கப்பட்டது என்னை (மிகவும்) ஈர்த்த விஷயமாகும்.

ஐஸ்லாந்திலிருந்து ஒரு விருந்தினர், நண்ட் கிசோர் ஸாஹிப் அவர்கள் (Nandkisore) உடைய சேர்மன் ஆவார். அவர் கூறுகிறார்: மத்தேயு 7:16 இல் நீங்கள் அவர்களின் கனிகளாலே அவர்களை அறிவீர்கள் என்று வந்துள்ளது. இந்த சொற்கள் 2025 ஆம் ஆண்டு மாநாட்டின் போது எனக்கு மிகவும் தாக்கத்தை ஏற்படுத்திய உயிருள்ள உண்மையாக வெளிப்பட்டது. பங்கேற்பாளர்களின் பிரகாசமான மகிழ்ச்சி நிறைந்த முகங்களைக் கண்டு என் உள்ளத்தில் ஆழமான தாக்கம் ஏற்பட்டது. தனது திருப்தியைத் தேடி ஒன்று கூடிய இந்த அடியார்களின் ஒற்றுமையைக் கண்டு இறைவன் மகிழ்ச்சியடைகிறான் என்பதற்கு இது ஒரு தெளிவான அடையாளமாகும் என்று நான் கருதுகிறேன்.

ஆஃப்ரிக்காவில் மனிதகுல சேவையில் ஈடுபட்டுள்ள மனிதம் முதலில் என்ற அமைப்பின் ஓர் ஊழியர் என்னிடம், இந்தத் தொண்டு மற்றவர்களுக்குப் பயனுள்ளது மட்டுமின்றி, அது அல்லாஹ்வுக்கு நெருக்கமாகவும் கொண்டு செல்கிறது என்று கூறினார். இது இறை நம்பிக்கையை நடைமுறையில் வெளிப்படுத்துவதற்கான ஒரு சக்திவாய்ந்த நினைவூட்டல் ஆகும்.

இதைப் போன்று அவர்களுக்கு பல தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன.

கஸக்கிஸ்தானிலிருந்து ஜமாஅத் அல்லாத விருந்தினர் ஸாலிஹா ஸாஹிபா (Sauley) வந்திருந்தார். அவர் கூறுகிறார்:

நான் கஸக்கிஸ்தானைச் சார்ந்தவள். முதல் முறையாக மாநாட்டில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்துள்ளது.நான் பல உலக நிகழ்ச்சிகளிலும், மாநாடுகளிலும் பங்கேற்றுள்ளேன். ஆனால், இங்குள்ள பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை என்னை மிகவும் கவர்ந்தது. இவ்வளவு அதிகமான மக்கள் பல்வேறு நாடுகளிலிருந்து நன்மைக்காக மட்டுமே வந்திருந்தனர். அவர்களின் நோக்கம், நன்மையின் வார்த்தைகளைக் கேட்பதும், உலகில் மக்கள் அமைதியுடனும், இணக்கத்துடனும் எப்படி வாழ வேண்டும் என்பதும், வெறுப்பு உணர்வுகளை உலகிலிருந்து எப்படி அகற்றுவது என்பதும், உலகில் அன்பு மற்றும் நேசத்தை எப்படி மேலோங்கச் செய்வது என்பதுமே ஆகும். பெண்களின் அந்தஸ்தை உயர்த்துவது குறித்து கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் சொற்கள் மிகவும் அற்புதமாக இருந்தன. இந்த மாநாட்டின் முழக்கம் அனைவருக்கும் அன்பு ; யாருக்கும் வெறுப்பில்லை என்பதாக இருந்தது. நாம் ஒன்றாக வாழ வேண்டும் என்பதற்கு மக்களின் ஒற்றுமை வழிகாட்டியது. நான் இதுபோன்ற வார்த்தைகளை ஒருபோதும் கேட்டதில்லை.இவை அனைத்தும் ஆன்மாவில் ஊடுருவிச் சென்று கொண்டிருந்தன.

இவர் அஹ்மதியல்லாதவர் ஆவார். முன்பு அஹ்மதிய்யத்திற்கு எதிராக இருந்ததாகவும், ஆனால், இந்தச் சூழலைப் பார்த்த பிறகு குறைந்தபட்சம் எதிர்ப்பை விட்டு விட்டு அதற்கு ஆதரவளிப்பேன் என்றும் கூறினார்.

ஆஸ்திரேலியாவிலிருந்து முஷ்தாக் ஸஹீர் நைஸா (Moshtagh Zakerinezah) ஸாஹிப் வந்திருந்தார். ஆஸ்திரேலியாவில் இஸ்லாமியவியல் ஆசிரியர் ஆவார். அவர் கூறுகிறார்: ஆண்டு மாநாட்டில் நான் எல்லா இடங்களிலும் மூஃமின்களைப் பார்த்தேன். எல்லாரும் மிகவும் நட்பாக இருந்தனர். இஸ்லாத்தின் தொண்டுக்கு ஒரு சிறப்பான சொற்களில் நான் மிகவும் ஈர்க்கப்பட்டேன். தற்போதைய பிரதான முஸ்லிம்களிடையே உள்ள ஆலிம்கள், தாடியை நீளமாக்குவதையும் குறிப்பிட்ட ஆடை அணிவதையும் மட்டுமே எல்லாம் என்று நினைக்கிறார்கள். அவர்கள் பெயர்தாங்கி முஸ்லிம்களாக இருக்கின்றார்கள். ஆனால், அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டுமே உண்மையான உள்ளத்துடன் இல்லாததிற்கு தொண்டாற்றுகிறது. இன்னும் இருநூறு வருட காலத்தில் இது உலகின் மீது வெற்றி கொண்டு விடலாம். நான் சுன்னத் ஜமாஅத்தைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் ஆவேன். ஆனால், அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனர் உண்மையிலேயே ஒரு புனிதமான ஆளுமையாக இருந்தார்கள் என்று நான் நம்புகிறேன். அவர்கள் அக்காலத்தின் முஜத்தித் ஆக இருந்தார்கள் என்று எனக்கு தோன்றுகிறது.

இங்கு வரை அவர் ஒப்புக் கொண்டார்.

அவர் மேற்கொண்டு கூறுகிறார்: ஆனால், நான் இன்னும் இதைப் பற்றி சிந்தித்து ஆராய்ந்து கொண்டிருக்கிறேன். அவர்களை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆகவும், உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியாகவும் ஏற்றுக் கொள்வதில் எனக்கு இன்னும் கொஞ்சம் தயக்கம் உள்ளது.

எவ்வாறாயினும், இது அவருடைய சிந்தனை ஆகும். இதன் பக்கம் அவருடைய சிந்தனையோட்டம் வந்துள்ளது. குறைந்தபட்சம் அவர் ஒரு நல்ல இயல்புடையவர்; பிடிவாதம் காட்டாமல், நான் இதைப் பற்றி சிந்திக்கமாட்டேன் என்று கூறாமல் நான் இதைப் பற்றி சிந்திக்கிறேன் என்று கூறியுள்ளார்.

பல்கேரியாவைச் சேர்ந்த புதிதாக பைஅத் செய்த பெண்மணி அலிஸ்டா ரூடி (Elista Rudy Demange) ஸாஹிபா கிறிஸ்தவத்திலிருந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர் ஆவார். அவர் கூறுகிறார்: மாநாட்டில் கலந்து கொள்வதற்கு முன்பு, நான் அநேகமாக இந்தச் சூழலின் ஒரு பகுதியாக எல்லா நேரமும் உணர முடியாமல் போய்விடுமோ என்ற அச்சம் என் மனதில் இருந்தது. ஏனெனில், நான் புதியவன்; எனது கலாச்சாரமும் மொழியும் வேறுபட்டது. ஆனால், நான் இங்கு கண்ட ஒற்றுமையையும், அன்பையும் உலகில் வேறு எங்கும் கண்டதில்லை. நான் உலகின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் வந்த மக்களைச் சந்தித்தேன். ஆனால், அவர்கள் அனைவரையும் ஒரே குடும்பத்தின் ஓர் அங்கத்தைப் போல் நான் உணர்ந்தேன். ஒருவரையொருவர் அறியாத போதிலும் புன்னகையுடன் ஒருவருக்கொருவர் சந்தித்தனர்.

சில சமயங்களில் ஒருவரின் நம்பிக்கை மற்றும் இறையச்சத்தின் மீது சந்தேகங்கள் அல்லது கவனக்குறைவின் தூசி படிந்து விடுகிறது. ஆண்டு மாநாட்டில் பங்கேற்பது, ஒரு புதிய ஆன்மிக வாழ்க்கையை மனிதன் தொடங்குவது போலவும் இருந்தது. இந்த அனுபவம் ஆன்மாவிற்கு புத்துணர்ச்சி அளிக்கிறது. உள்ளத்தில் அமைதியையும், நிம்மதியையும் நிரப்புகிறது.

ஜார்ஜியாவைச் சேர்ந்த ரோலண்ட் ஷம்வார்டே (Rolannd Shavadze) என்பவர் கூறுகிறார்: மாநாட்டின் அமைதியான சூழல், உரைகள் மற்றும் கலீஃபாவின் சொற்பொழிவுகள் ஆகியவை ஆன்மிகத்தில் மேற்கொண்டு முன்னேறுவதற்கு ஒரு பெரும் பங்களிப்பை வழங்குகின்றன. விருந்தோம்பல் குறித்த இஸ்லாமிய போதனைகளைப் பற்றி விளக்கப்பட்ட வெள்ளிக்கிழமை குத்பா எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அதேபோன்று, கலீஃபா அவர்களின் பெண்களுக்கான சொற்பொழிவும் என் மீது மிகவும் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியது. நான் ஒரு ஜார்ஜிய முஸ்லிமும், பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகவும் இருக்கின்றேன். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு எனக்கு ஜார்ஜியாவின் சிறந்த ஆசிரியர் விருது கிடைத்தது. எனது துறையும் கல்வியே ஆகும். உங்கள் ஜமாஅத், பெண்கள் மற்றும் ஆண்களின் கல்விக்கு எப்படி ஊக்கமளிக்கிறது? என்பது குறிப்பாக எனக்குப் பிடித்திருந்தது. ஏனெனில் இந்த ஆண்டு இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம் எனற் நூலை ஆங்கிலத்திலிருந்து ஜார்ஜிய மொழியில் மொழி பெயர்க்கும் நல்வாய்ப்பு எனக்கு கிடைத்தது. மொழி பெயர்க்கும்போது நான் மிகவும் சிரித்தேன். ஞாயிற்றுக் கிழமை நிறைவுரையில் கலீஃபா அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். உங்களை வெறுப்புடன் பார்க்கும் மற்ற முஸ்லிம்களின் பொய்யான குற்றச்சாட்டுக்கு இஸ்லாத்தின் அழகான போதனைகளுடன் பதில் அளிக்கப்பட்டது எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அடுத்ததாக , பைஅத் காட்சியும் என்னை மிகவும் கவர்ந்தது.

---

*திருக்குர்ஆனிலிருந்து...*

**நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)**

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

இன்றைய காலகட்டத்தில் இஸ்லாத்தைப் பற்றி எதிர்மறையான தோற்றம் முன்வைக்கப்படுகிறது. யாரெல்லாம் இஸ்லாத்தின் அழகான போதனைகளைக் காண விரும்புகிறாரோ அவர் மாநாட்டிற்கு வந்து அன்பு, சகோதரத்துவம் மற்றும் அமைதியின் சூழலைத் தமது கண்களால் கண்டு கொள்ளட்டும்!

அதேபோல, ஜெஸிகா கார்சியாகால் (Jessica Kohi Liccardo) என்பவர் காங்கிரஸ்காரர் சீன் ரிகார்டோ(Sam riccardo) வின் மனைவி ஆவார். அவர் கூறுகிறார்:

நான் (Domestic Violance)குடும்ப வன்முறைக்கு எதிரான ஒரு துறையில் பணியாற்றுகிறேன். கலீஃபா அவர்கள் பெண்களுக்கு எதிராக உடல் ரீதியான வன்முறையை மட்டும் குறிப்பிடாமல் பெண்களுக்கு எதிரான உணர்வு ரீதியிலான வன்முறையையும் தமது சொற்பொழிவில் குறிப்பிட்டதைக் கண்டு நான் ஆச்சரியப்பட்டேன். ஒரு பெண்ணுக்கு, ஏதேனும் நேர்ந்தால் அவள் எங்கு உதவி பெற முடியும்? என்ற கேள்விக்கு எனக்கு விடை கிடைக்கவில்லை.

அவர் என்னிடம் (இக்) கேள்வியை கேட்டபோது, நான் அவரிடம், ஜமாஅத்தின் அமைப்பு உள்ளது என்றும்,அவர்கள் கலீஃபாவிடமும் ஜமாஅத் அமைப்பிடமும் வருகிறார்கள் என்றும் பிறகு ஜமாஅத் அவர்களுக்கு உதவுகிறது என்றும் மற்ற வழிமுறைகளையும் அவர்கள் கையாளலாம் என்றும் கூறினேன்.

அவர் கூறுகிறார்: இந்த விஷயங்களைக் கேட்டு எனக்கு ஆறுதல் கிடைத்தது. கலீஃபாவிற்கு ஜமாஅத் மக்களுடன் தனிப்பட்ட தொடர்பு உள்ளது என்பதும் எனக்கு ஆறுதல் அளித்தது.

சிலர் (என்னிடம்) நீங்கள் கூறிய சில விஷயங்களில், குறிப்பாக அடிக்கும் விஷயத்தில், ஆட்சேபனைகள் எழும்புகின்றன என்று கூறுகிறார்கள். அதற்கு ஒரு நீண்ட விளக்கம் உள்ளது; அது ஒரு தனி விஷயம் ஆகும். அதன் நிபந்தனைகள் பூர்த்தியே ஆகுவதில்லை. பெண்ணை அடிக்கும் விஷயத்தில் அந்த நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால், அதற்குள் சூழ்நிலைகள் எப்படி ஆகிவிடும்? என்றால், அடிக்க வேண்டிய அவசியமே ஏற்படாது. எனவே இந்த தொலைதூரத்தில் உள்ள ஒரு சாத்தியம் ஆகும். எவ்வாறிருப்பினும், இஸ்லாம் அந்த போதனையை வழங்கியுள்ளது.

ஸ்வீடனிலிருந்து ஓர் அரபு லஜ்னா இங்கு வந்திருந்தார். அவர் கூறுகிறார்: ஆண்டு மாநாடு ஒரு பரந்த வீடு போன்றது.அது முழு குடும்பத்தையும் தன்னுள் அடக்கிக் கொள்கிறது. ஸ்வீடனில் மிகவும் குறைவான அரபு அஹ்மதிகளே இருக்கின்றனர். ஆண்டு மாநாட்டில் அரேபியர்கள், அரபுக் கூடாரம் என்ற பெயரைக் கேட்கும்போது ஒரு விசித்திரமான நிம்மதியும், தம் சொந்தம் என்ற உணர்வும் ஏற்படுகிறது. மற்ற அரபு சகோதரிகள் மற்றும் சகோதரர்களைச் சந்தித்தது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. இது என் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. கலீஃபாவைச் சந்தித்ததும் ஒரு நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியது.

அல்லாஹ் கலந்து கொண்ட அனைத்து விருந்தினர்களின் உள்ளங்களை மேலும் திறப்பானாக! அவர்கள் அஹ்மதிய்யத் மற்றும் உண்மையான இஸ்லாத்தைப் புரிந்து கொள்பவர்களாகவும், காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்பவர்களாகவும் ஆவார்களாக! புதிதாக பைஅத் செய்தவர்களையும் நம்பிக்கை, கலப்பற்றத் தன்மையில் முன்னேறச் செய்வானாக! அதேபோல், ஒவ்வோர் அஹ்மதிக்கும், மாநாட்டில் அவர்கள் பார்த்த கேட்ட நிகழ்ச்சிகளைப் பின்பற்றுபவர்களாகவும், அதைத் தங்கள் வாழ்க்கையின் அங்கமாக ஆக்குபவர்களாகவும், உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை கொடுப்பவர்களாகவும் இருக்கவும், இந்த உணர்வு எப்போதும் நிலைத்திருக்கவும் அல்லாஹ் நல்வாய்ப்பளிப்பானாக! மாநாட்டின் அருள்களிலிருந்து ஒவ்வோர் அஹ்மதியும் எப்போதும் பயனடைந்து கொண்டிருக்கட்டுமாக! தம் நஃப்ஸையும் தம் சூழலையும் சீர்திருத்துவதற்காக முழுமையாக முயற்சி செய்பவர்களாகவும் இருப்பார்களாக!

இது குறித்து பத்திரிகை அறிக்கையையும் சுருக்கமாக தந்து விடுகிறேன். இத்தாலிய பத்திரிகைகளில் அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. கூறுகின்றார்கள்:

ஆண்டு மாநாட்டின் சில முக்கிய அமர்வுகளை ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் அதிகாரப்பூர்வ செய்தி நிறுவனமான யூரோ கம்யூனிக்கேஷன் (Eurocounicazione) எனும் நியூஸ் ஏஜென்ஸி நேரடியாக ஒளிபரப்பியது. மேலும் பல்வேறு நேர்காணல்களை ஒளிபரப்பி, வெளியிட்டுள்ளது. இதுவரை 60 செய்தித்தாள்கள் மற்றும் பிற செய்தி நிறுவனங்களில் மாநாட்டைப் பற்றிய அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. ஆன்லைன் இன்ஃப்புலூவன்ஸர்ஸ் நிறுவனம் எனது ஒரு தூதுச் செய்தியையும் வழங்கியுள்ளது. இத்தாலியிலிருந்து வந்த இரண்டு பத்திரிகையாளர்கள் - அவர்களின் சமூக ஊடகங்களில் சுமார் அரை மில்லியன் பின்தொடர்பவர்களைக் கொண்டவர்கள் - ஜமாஅத்தைப் பற்றி நேர்மறையான முறையில் அறிக்கை அளித்துள்ளனர்.

ஜமாஅத் பிரஸ் அன்ட் மீடியா துறையின் பணியின் கீழ், ஆன்லைன் இணையதளத்தில் சுமார் ஐம்பது மில்லியன் மக்கள் பார்த்துள்ளனர். சுமார் 49 இணையதளங்கள் உள்ளன. அச்சு ஊடகங்களில், பத்திரிகைகளில் 17 கட்டுரைகள் வெளியிடப்பட்டன. 20 மில்லியன் மக்கள் பார்த்தனர்; படித்தனர். டி.வியில் 25 நிகழ்ச்சிகளில் ஒலிபரப்பப்பட்டன. இவற்றில் ஆண்டு மாநாட்டு நிகழ்ச்சிகள் உள்ளடக்கமாக ஒளிபரப்பட்டன. கேட்பவர்களின் எண்ணிக்கை 20 மில்லியனாக இருந்தது. தொலைக்காட்சியில் மாநாட்டின் கவரேஜ் வழங்கப்பட்டது. தொலைக்காட்சி சேனல்களைப் பார்ப்பவர்களின் எண்ணிக்கை சுமார் 5 மில்லியன் ஆகும். அதேபோல், ஊடக நிறுவனங்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் பொது நபர்கள் மத்தியில் சமூக ஊடகங்களில் இது தொடர்பாக அதிகமான அளவில் எழுதப்பட்டுள்ளது. சமூக ஊடகங்களின் மூலமாக 14 மில்லியன் வரை இந்தச் செய்தி சென்றடைந்துள்ளது.

அல்லாஹ்வின் அருளால், அனைத்தையும் சேர்த்தால், சுமார் 100 மில்லியன் மக்களை இந்தச் செய்தி சென்றடைந்துள்ளது. பிரபலமான ஊடக நிறுவனங்களில்

I TV. LBC. The Times, The Guardian,Telegraph. Daily Mail, Independent, BBC Arabic twenty one (21) Daily Express, London, Evening Standard மற்றும் New Arab ஆகியவை அடங்கும். இதேபோல், இன்னும் பல ஊடகங்களுக்கும் செய்தி சென்றடைந்துள்ளது.

MTA ஆஃப்ரிக்கா மூலம் பல்வேறு சேனல்களில் எனது சொற்பொழிவுகள் ஒளிபரப்பட்டன. ஐம்பதுக்கும் மேற்பட்ட அன்பர்கள் ஆண்டு மாநாட்டின் ஒளிபரப்புகள் 22 தேசிய மற்றும் பிராந்திய தொலைக்காட்சி சேனல்களில் ஒளிபரப்பப்பட்டன. 304 மணிநேர ஒளிபரப்பு நடந்தது; 65 மில்லியன் மக்கள் வரை செய்தி சென்றடைந்தது. மாநாடு தொடர்பான வானொலி நிலையங்களில் 91 வெவ்வேறு அறிக்கைகள் ஒலிபரப்பப்பட்டன. இதன் மூலம் 16 மில்லியன் மக்களைச் செய்தி சென்றடைந்தது. ஊடக நிறுவனங்கள் மற்றும் இதர ஊடகங்கள் மூலம் 47 அறிக்கைகள் ஒளிபரப்பப்பட்டன. இதன் மூலம் 150 மில்லியன் மக்கள் வரை செய்தி சென்றடைந்தது.

MTA ஆஃப்ரிக்காவின் தாக்கங்கள் குறித்து இவ்வாறு வருகிறது:

மாலியின் ஓர் இடத்தின் முபல்லிஃக் எழுதுகிறார்: மாநாட்டின் மூன்றாவது நாளில் ஒரு ஆத்மார்த்தமான காட்சியைக் காண முடிந்தது. காலையில் மழை பெய்து கொண்டிருந்தது; அதுவும் கனமழை. இன்று பள்ளிவாசலுக்கு யாரும் வரமாட்டார்கள் என்று தோன்றியது. ஆனால், உலகளாவிய பைஅத்திற்கு சிறிது நேரத்திற்கு முன்பு, சில அன்பர்கள் அவர்களில் சிலர் புதிதாக பைஅத் செய்தவர்களும் இருந்தனர். மழையில் நடந்தோ அல்லது சைக்கிளிலோ பள்ளிவாசலை வந்தடைந்தனர். அவர்கள் முற்றிலும் நனைந்திருந்தனர்.

அவர்களிடம் , நீங்கள் வீட்டிலிருந்தே வானொலியில் கேட்டிருக்கலாமே? இவ்வளவு மழையில் வந்திருக்கிறீர்களே! என்று முபல்லிக் கேட்டார். அதற்கு, பைஅத் செய்த ஒருவர், நாங்கள் வீட்டிலிருந்து கேட்டிருக்கலாம்தான்; ஆனால், கலீஃபத்துல் மஸீஹ் அவர்களை எங்கள் கண்களால் பார்த்திருக்க முடியாதே!; இதில் இருக்கும் மகிழ்ச்சியில் வேறு எதிலும் இல்லை ; உலகளாவிய பைஅத்தின் ஒளியையும், அருள்களையும் நான் இழக்க விரும்பவில்லை ; அதனால் தான் நான் மழையில் நனைந்த போதிலும் பள்ளிவாசலுக்கு வந்தேன் என்று பதிலளித்தார்.

அல்லாஹ் அவர்கள் அனைவரின் ஈமானையும், உறுதித்தன்மையையும் மேலும் அதிகரிப்பானாக!

தொழுகைக்குப் பிறகு நான் ஒரு ஜனாஸா காயிப் தொழுகையையும் தொழ வைப்பேன். காஸாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய அப்துல் கரீம் ஜமால் யூதே ஸாஹிப் அவர்களுடைய ஜனாஸாவாகும். கடந்த நாட்களில் இஸ்ரேலிய இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் இவர் ஷஹீது ஆனார். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

மர்ஹூமுடைய சகோதரர் கூறுகிறார்: அவருக்கு 45 வயது; திருமணமானவர்; 4 மகள்களும் 2 மகன்களும் உள்ளனர். மூத்த மகனுக்கு 16 வயது. இளைய குழந்தைக்கு இரண்டரை வயது. அவர் காஸா பகுதியில் ஜபாலியா என்ற இடத்தில் வசித்து வந்தார். ஒரு பழமைவாத முஸ்லிம் குடும்பத்தில் வளர்ந்தார். 11 ஆம் வகுப்புக்குப் பிறகு வீட்டின் செலவுகளுக்காக தந்தைக்கு உதவ, தந்தையுடன் கட்டட வேலையில் சேர்ந்தார். 11 சகோதர, சகோதரிகளில் அவர் இரண்டாமவராக இருந்தார். பின்னர் அவர் ஒரு உலேட்கப் பட்டறையையும் திறந்தார். அது இஸ்ரேலிய தாக்குதலின்போது

தகர்க்கப்பட்டது. 2013-ல் தனது சகோதரர் மூலம் ஜமாஅத்துடன் அறிமுகமானார். அந்த சமயத்தில் பைஅத்தும் செய்துவிட்டார். ஜமாஅத்துடன் அவர் நிலையான தொடர்பில் இருந்தார். நன்கு செயலாற்றும், உண்மையான மனிதராக இருந்தார். ஜமாஅத்துடனான தொடர்பு காரணமாக காஸா பாதுகாப்பு அமைப்புகள் பலமுறை அவரிடம் விசாரணை செய்தன. பல வகையான விசாரணைகளை அவருக்கு எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஆனால், அவர் தனது கருத்துகளை மாற்றவில்லை. ஜமாஅத்தை விட்டுப் பின்வாங்கவில்லை ; தொடர்ந்து ஜமாஅத்துடன் தொடர்பையும், உறவையும் தொடர்ந்தார்.

2025-ல் ஆக்கிரமிப்பு இராணுவம் அவரது வீட்டைத் தகர்த்தது. அதன் பிறகு வாடகை வீட்டில் வசித்து வந்தார். சமீபத்தில் காஸா பகுதியில் ஏற்பட்ட பஞ்சத்திற்குப் பிறகு, உதவிப் பொருட்கள் விநியோகிக்கப்படும் இடத்திற்கு மர்ஹூம் சென்றார். அங்கு மாவு போன்ற உதவிப் பொருட்கள் உள்ளே செல்ல இராணுவம் அனுமதித்திருந்தது; அதனால் கூட்டம் கூடியது. இக்கூட்டம் இஸ்ரேலிய இராணுவத்தின் நெருக்கமான பகுதிகளுக்குச் சென்றடைந்தது. நிராயுதபாணியான அந்த மக்கள் மீது இஸ்ரேலிய இராணுவம் கடுமையான துப்பாக்கிச் சூடு நடத்தியது. அதில் என் சகோதரருக்கு அருகில் இருந்த ஒருவருக்கு காயம் ஏற்பட்டது. என் சகோதரர் எந்த காயமடைந்த நபருக்கு உதவி செய்யும்போது ஷஹீது ஆனாரோ அந்த நபர் என்னிடம், உங்கள் சகோதரர் ஷஹாதத்திற்கு முன்பு மூன்று முறை கலிமா கூறினார்: அவர் நபி (ஸல்) மற்றும் நபிமார்களின் வழிமுறைப்படி மரணமடைந்தார் என்று கூறினார். அவர் ஸய்யிதுனா முஹம்மது (ஸல்) அவர்களின் மார்க்கத்தின் மீதும், இமாம் மஹ்தியின் பைஅத்தின் மீதும் நிலைத்திருந்தவாறு அவர் மரணமடைந்தார் என்பது எங்களுக்கு ஆறுதலாக உள்ளது. அவர் அல்லாஹ்வின் அருளால் கலப்பற்றவராகவும், உண்மையான மக்களில் ஒருவராகவும் இருந்தார்.

Humanity First அமைப்பின் பொறுப்பாளர் டாக்டர் ஹஃபீல் ஸாஹிப் கூறுகிறார்:

நவம்பர் 2021-ல் Humanity First அமைப்பின் சுற்றுப்பயணத்தின் ஒரு பகுதியாக காஸாவிற்குச் சென்றபோது, அங்கு அப்துல் கரீம் ஸாஹிபைச் சந்தித்தேன். அவரை மிகவும் கலப்பற்ற , அர்ப்பணிப்புள்ள அஹ்மதி முஸ்லிமாக் கண்டேன்.

அல்லாஹ் அவருடைய அந்தஸ்துகளை உயர்த்துவானாக! அவருடைய குழந்தைகளைத் தன் பாதுகாப்பில் வைப்பானாக!

தமிழாக்கம்

முரப்பி A.P.A தாரிக் அஹ்மது

* * * * * * * *

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

1-ம் பக்கத் தொடர்ச்சி...(தஃப்ஸீரே கபீர்.......)

இறைத் தூதர் (ஸல்) கூறினார்கள். முந்தைய வசனங்களின் விளைவாக இந்த வசனம் இயல்பாகவே தாமாக அமைந்து விடுகின்றது என்பது அந்த பேறிழந்தவருக்கு தோன்றவில்லை. எனது வாயிலிருந்து இந்த வசனம் வெளிவந்ததை எவ்வாறு இறைத் தூதர் (ஸல்) அவர்கள் அதனை வஹீயாக ஆக்கிவிட்டார்களோ அதேபோன்றுதான் அன்னார் (ஸல்) நவூதுபில்லாஹ் சுயமாக முழு குர்ஆனையும் உருவாக்கியுள்ளார்கள் என்று அந்த நபர் புரிந்து கொண்டார். ஆக, அவர் முர்தத் ஆகிவிட்டார். மேலும் மக்காவிற்கு சென்று விட்டார். மக்கா வெற்றியின் சந்தர்ப்பத்தின்போது, எந்த நபர்களை கொலை செய்வதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டிருந்தார்களோ அவர்களில் அப்துல்லாஹ் பின் அபீ ஸரஹ்ஹூம் ஒருவராக இருந்தார். ஆனால், ஹஸ்ரத் உஸ்மான்(ரலி) அவர்கள் அவருக்கு அடைக்கலம் கொடுத்து விட்டார்கள். மேலும் அவர் அன்னாருடைய வீட்டில் மூன்று நாட்கள் ஒளிந்து இருந்தார். ஒருநாள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்கத்து மக்களிடம் பைஅத் வாங்கிக் கொண்டிருந்தபோது, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அப்துல்லாஹ் பின் அபீ ஸரஹ்வையும் அன்னாருடைய சமூகத்திற்கு அழைத்து வந்தார்கள். மேலும், அவருடைய பைஅத்தை ஒப்புக் கொள்ளுமாறு விண்ணப்பித்தார்கள்.

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் முதலில் சற்று தயங்கினார்கள். ஆனால், பின்னர் அன்னார் (ஸல்) அவரிடம் பைஅத் வாங்கிவிட்டார்கள். மேலும், இவ்வாறு மீண்டும் அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு விட்டார்.

أَحْسَنُ الْخَالِقِيْنَ

என்பது தொடர்பாக இதனையும் நினைவிற் கொள்வது அவசியமாகும். அதாவது, இறைவன் மட்டுமின்றி வேறொரு படைப்பாளனும் இருக்கின்றார் என்பது இதன் பொருள் கிடையாது. அல்லாஹ் கூறுகின்றான்: உலகின் நிச்சயமாக ஏராளமான நிச்சயமாக உலகில் ஏராளமான கண்டுபிடிப்பாளர்களும் படைப்பாளிகளும் காணப்படுகின்றனர்.

ஆனால், இறைவனின் கண்டுபிடிப்புகள் மற்றும் படைப்புகளுக்கு எதிரில் அவர்களின் கண்டுபிடிப்புகள் மற்றும் படைப்புகளை ஒப்பிட்டு பார்த்தார் அவர்களின் கண்டுபிடிப்புகள் இறைவனின் கண்டுபிடிப்புகளுக்கு எதிரில் எந்த உண்மைத்துவமும் கொண்டிருக்கவில்லை என்று உங்களுக்கு ஒப்புக் கொள்ள நேரிடும். இதற்கான உதாரணம் இதுவே ஆகும். அதாவது உதாரணமாக, அல்லாஹ் நன்கு கேட்பவனாகவும், நன்கு பார்ப்பவனாகவும் இருக்கின்றான். ஆனால், அவன் மனிதன் தொடர்பாகவும் கூறுகின்றான்:

فَجَعَلْنٰهُ سَمِيْعًا بَصِيْرًا

பொருள்: நாம் அவனை நன்கு கேட்பவனாகவும், பார்ப்பவனாகவும் படைத்துள்ளோம். மனிதன் இறைவனின் பண்புகளான நன்கு கேட்பவன் மற்றும் நன்கு பார்ப்பவன் என்ற பண்புகளில் இணையாக இருக்கின்றான் என்பது இந்த வசனத்தின் பொருள் கிடையாது. மாறாக, இறைவன் அவனுக்கு பார்ப்பதற்கும், கேட்பதற்கும் ஆற்றல் வழங்கியுள்ளபோது, உவமை வடிவில் மனிதனையும் நன்கு பார்ப்பவன் மற்றும் கேட்பவன் என்று கூறியிருக்கின்றான். பின்னர், மனிதனுக்கு மட்டும் ஸமீஃ மற்றும் பஸீர் என்ற சொற்கள் வந்துள்ளன. ஆனால், வல்ல இறைவனுக்காக اَلسَّمِيْعُ اَلْبَصِيْرُ என்ற சொற்கள் வந்திருக்கின்றன. அதாவது, கேட்டல் மற்றும் பார்த்தல் போன்றவற்றில் எத்தனை சிறப்புகள் உள்ளனவோ அவை அனைத்தும் இறைவனிடம் காணப்படுகின்றன என்பது பொருளாகும். (தஃப்ஸீரே கபீர், தொகுதி 6,பக்கம் 139, காதியான் பதிப்பு 2010-ம் ஆண்டு)

* * * * * * * *

12-ம் பக்கத் தொடர்ச்சி...(குத்பா பேருரை 08.08.25)

உமைர் மதீனா சென்றடைந்தபோது, ரஸூல் (ஸல்) அவர்களுக்கு அவர்களது அனைத்து திட்டமும் தெரிந்து விட்டது. இந்த அற்புதத்தைக் கண்டு உமைர் அப்பொழுதே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு விட்டார்.

மக்கா வெற்றியின் போது உமைர் தனது நண்பரான ஸஃப்வானும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று விருப்பமும், கவலையும் கொண்டிருந்தார். ஹஸ்ரத் உமைர் பின் வஹப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சமூகத்தில் ஆஜரானார்கள். மேலும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! ஸஃப்வான் எனது சமுதாயத்தின் தலைவர் ஆவார்; அவர் உங்கள் மீதான அச்சத்தால் ஓடி விட்டார். தாங்கள் அவருக்கு மன்னிப்பு வழங்குங்கள் என்று கூறினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவருக்கு மன்னிப்பு வழங்கினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர் மன்னிக்கப்பட்டார் என்று கூறினார்கள். அதற்கு, நான் அவருக்கு தங்கள் சார்பாக மன்னிப்பின் அடையாளமாக காண்பிக்க எனக்கு உங்களது ஏதேனும் ஓர் அடையாளத்தை வழங்குங்கள் என்று அவர் வேண்டினார். அப்போது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தாம் அணிந்திருந்த தமது தலைப்பாகையை கழற்றி அவருக்கு வழங்கினார்கள். ஹஸ்ரத் உமைர் (ரலி) அவர்கள் பயணம் செய்து ஸஃப்வானை சென்றடைந்தார்கள். அவர் கப்பலில் பயணம் மேற்கொள்ள தயாராக இருந்தார். ஹஸ்ரத் உமைர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் மக்கள் அனைவரிலும் அதிக பரிசுத்தமான மற்றும் மக்கள் அனைவரிடமும் ரத்த உறவை அதிகம் பேணி பாதுகாக்கக் கூடிய மனிதரிடமிருந்து வருகின்றேன். உங்களை அழிவில் இட்டு விடாதீர்கள். நான் உங்களுக்காக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது அடைக்கலத்தை பெற்று வந்துள்ளேன் என்று கூறினார்கள்.

**(இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்.)**

தமிழாக்கம்

முரப்பி
முஹம்மது சுல்தான் மைதீன்

* * * * * * * *

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL
MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

# ஜுமுஆ பேருரை

**மக்கா வெற்றியின் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு & சிந்து மாகாணத்தைச் சேர்ந்த மதிப்பிற்குரிய சவ்த்ரி அப்துல் ஃகஃபூர் ஸாஹிப் மற்றும் மதிப்பிற்குரிய முஹம்மது அலி ஸாஹிப் மர்ஹூம் ஆகியோரின் நற்குறிப்பும் ஜனாஸா தொழுகையும்**

மக்களின் உள்ளங்களிலிருந்து அவர்களின் கற்பனையான அச்சமும், மகத்துவமான எண்ணமும் அகன்று விட வேண்டும் என்பதற்காக சிலைகளின் பீடங்களை அழித்து விடுவதற்கான கட்டளையை மக்கா வெற்றிக்குப் பிறகு உடனடியாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வழங்கினார்கள் இந்த நுட்பமான ஞானம் நிறைந்த போதனை அருளுக்குரியதாக நிரூபணமானது ஏனெனில் அவற்றை அகற்றியதன் மூலம் மக்களின் உள்ளங்களிலிருந்து சிலைகளின் மீதான அச்சமும் ஆதிக்கமும் நீங்கிவிட்டது. மேலும் ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முன்வைத்த ஏகனும் தனித்தவனுமாகிய அந்த இறைவனைப் பற்றிய சிந்தனையே சரியானதாகும் என்பதில் அவர்களுக்கு உறுதி ஏற்பட ஆரம்பித்தது

குரேஷிய தலைவர்களுள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களில் ஸுஹைலை விட அதிகமாக தொழுகை மற்றும் நோன்புகளை பேணக் கூடிய மற்றும் ஸதக்கா வழங்கக் கூடிய மனிதர் எவரும் இருக்கவில்லை. அதிக அதிகமாக அழுது மன்றாடக் கூடியவராக இருந்தார். திருக்குர்ஆனை ஓதும் போது பெரும்பாலும் அழுது வந்தார் இறைவன் மீது ஆணையாக! அன்னார் குழந்தை பருவத்திலும் நன்மை செய்யக் கூடியவராக இருந்தார். இந்த வயதிலும் நன்மை செய்யக் கூடியவராக இருக்கின்றார் என்று ஸுஹைல் கூறினார்

மக்கா வெற்றி சந்தர்ப்பத்தின்போது இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட மக்கத்து தலைவர்களுள் பெரும்பாலார் பிற்காலத்தில் தங்களது வாழ்வில் ஒரு மாபெரும் ஆன்மிகப் புரட்சியை உருவாக்கிக் கொண்டிருந்தார்கள்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 08 ஆகஸ்ட் 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **ஸுஹூர் மாதம் 08 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ஆண்டு மாநாட்டிற்கு முன்பு மக்கா வெற்றி தொடர்பான சம்பவங்கள் எடுத்துக் கூறப்பட்டிருந்தது. இஸ்லாத்தின் சில கடும் எதிரிகளைக் குறித்தும், அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது தொடர்பாகவும் நான் எடுத்துக் கூறியிருந்தேன். அவர்களில் மேலும் ஒரு சிலர் இருக்கிறார்கள்.

வஹ்ஷி பின் ஹர்பு என்ற ஒருவர் இருந்தார். உஹது போரின் போது, ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களை அவர் தான் ஷஹீதாக்கி இருந்தார். மேலும் மக்கா வெற்றிக்குப் பிறகு அவர் தாயிஃபுக்கு ஓடிவிட்டார். தாயிஃப் வாசிகள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டபோது, இவரும் சென்று இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்.
(ஸுபுலுல் ஹுதா, தொகுதி 5, பக்கம் 225, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

வஹ்ஷி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட குறிப்பு புஹாரீயின் அறிவிப்பில் இவ்வாறு உள்ளது. அவரே இவ்வாறு கூறுகிறார்:

நான் இஸ்லாம் பரவும் வரை மக்காவில் தங்கி இருந்தேன். பிறகு நான் தாயிஃபை நோக்கிச் சென்று விட்டேன். மக்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடத்தில் தூதுவரை அனுப்பினார்கள். மேலும் என்னிடம் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் தூதுவர்களிடத்தில் பகைமை காட்ட மாட்டார்கள் என்று கூறப்பட்டது. அவர் கூறினார்: நான் அவர்களுடன் புறப்பட்டேன். எதுவரை என்றால், நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை சென்றடைந்தேன். அன்னார் (ஸல்) என்னைப் பார்த்தபோது, நீர் வஹ்ஷியா? என்று கேட்டார்கள். ஆம்! என்று நான் கூறினேன். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் நீர்தான் ஹம்ஸாவை கொலை செய்தீரா? என்று கேட்டார்கள். அதற்கு நான் நீங்கள் கேள்விப்பட்டது தான்! என்று கூறினேன். அதற்கு, நீர் உமது முகத்தை என்னிடத்தில் இருந்தும் மறைத்துக் கொள்வது சாத்தியமா? என்று இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதாவது அன்னார் (ஸல்) கூற விழைந்தது என்னவென்றால், எனக்கு மீண்டும் ஞாபகம் வராமல் இருக்கக் கூடாது ; நீர் உமது முகத்தை காண்பிக்காதீர்கள் என்று இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். பிறகு இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மரணமடைந்தார்கள். மேலும் முஸைலமா கஸ்ஸாப் கிளர்ச்சி செய்தான்.

கூறுகிறார்கள்:

நான் முஸைலமாவை நோக்கி நிச்சயமாக செல்வேன். ஏனெனில், நான் அவரைக் கொன்று அதன் மூலம் ஹஸ்ரத் ஹம்ஸாவை கொலை செய்ததற்கு நான் பரிகாரம் செய்ய வேண்டும்.

அவர்கள் கூறுகிறார்கள்:நானும் மக்களுடன் புறப்பட்டேன். பின்னர் அவனுக்கு என்ன நிகழ்ந்ததோ அது நிகழ்ந்தது. அதாவது அவன் கொல்லப்பட்டான். கூறுகின்றார்கள்:

நான் ஒரு நபரை சுவற்றை ஒட்டி நிற்பதாகக் கண்டேன். அவன் கோதுமை நிற ஓர் ஒட்டகத்தைப் போன்று தென்பட்டான். தலைமுடி கலைந்து இருந்தது. அவர்கள் அங்கு நின்று கொண்டிருப்பதாகப் பார்த்தது முஸைலமா கஸ்ஸாபைத்தான்.

அவர்கள் கூறினார்கள்: நான் எனது ஈட்டியை எறிந்தேன். மேலும் அதனை அவனது மார்புக்கு நடுவில் எறிந்தேன். எதுவரை என்றால், அது அவனது இரண்டு தோள்களுக்கும் நடுவிலிருந்து வெளியேறியது. அவர்கள் கூறினார்கள்:

அன்னாரின் ஒரு நபர் அவர்களை நோக்கி விரைந்தார். மேலும் அவனது தலையில் வாளால் தாக்கினார். இவ்வாறாக அவன் கொல்லப்பட்டான். (ஸஹீஹ் புஹாரீ, கிதாபுல் மகாஸீ, ஹதீஸ் எண்: 4072)

இவ்வாறு ஒருவர் அம்ர் பின் ஹாஷிமின் அடிமைப் பெண் சாரா என்பவள் இருந்தாள். இவர் பாடகராக இருந்தார். மக்கா வெற்றிக்கு முன்பு அன்னாரிடம் வந்தார். மேலும் அன்னாரிடம் சிலவற்றை கேட்டார். மேலும் தேவையைக் கூறி முறையிட்டார். ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் உனது பாடல்களுக்கு என்ன நேர்ந்தது? நீ நன்கு பாடி வந்தாயே? சம்பாதித்து வந்தாயே? என்று கேட்டார்கள். அதற்கு அவர் இணை வைப்பாளர்களின் தலைவர் பத்ரு போரில் கொல்லப்பட்டதில் இருந்து அவர்கள் பாடல்களை கேட்பதை நிறுத்தி விட்டார்கள் என்று கூறினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம்


A. SAMSUL ALAM
A. ABDUL RAHIM



Dealers of Natural Precious & Semi-Precious Gemstones

TOONICE
DEALERS OF PRECIOUS & SEMI-PRECIOUS GEMSTONES
No. 100/59-A, 1st Floor, South Thaikkat Street Melapalayam, Tirunelveli-627005 Tamil Nadu, India
+91 9659389953 toonicegems@gmail.com

Al-Nida GEMS
No. 1/33, 1st Floor Village Road Balaji Nagar Extension Puzhuthivakkam, Chennai-600091 Tamil Nadu, India
+91 9042150339 alnidagems@gmail.com

HG GEMS
HANIYAHANA GEMS CO., LTD.
No. 191/16, Soi Puttha Osot Siphraya, Bangrak Bangkok - 10500 Thailand
+66 633751327 gemscertify22@gmail.com

#12, KNG Garden, Sundakamuthur Main Road, Kuniyamuthur, Coimbatore - 641 008.
93632 27229
successraoof@gmail.com
SUCCESS INDIA
PROMOTERS
M. Abdul Raoof
93632 27229

(ஸல்) அவர்கள் அவளுக்கு ஓர் ஒட்டகம் நிறைய தானியங்களை வழங்கினார்கள். பிறகு அவள் குறைஷியர்களிடம் சென்று விட்டாள்.

இப்னு ஹதல் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை இகழ்ந்து கவிதை படிக்கும்படி அவளிடம் கூறினான். இவள் அந்த தீய கவிதைகளை பாடி வந்தாள். இவள் பரிசை பெற்றிருந்தும் கூட தனது செயலில் இருந்து விலகவில்லை. மேலும் எந்தப் பெண்ணிடம் இருந்து ஹஸ்ரத் ஹாதிப் (ரலி) அவர்களின் கடிதம் கிடைத்ததோ அந்தப் பெண் இவராகவே இருந்தார். இவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். மேலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் வரை உயிருடன் இருந்தாள்.

அதேபோன்று இப்னு ஹதலின் மற்றும் ஒரு பெண் அடிமை ஃபரத்னா ஆவாள். இவளும் அன்னாரை பற்றி இகழ்ந்து கவிதை பாடி வந்தாள். அவள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டாள்.
(ஸுபுலுல் ஹுதா வர் ரஷாத், தொகுதி 5, பக்கம் 225, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

அடுத்து, ஹஸ்ரத் ஹாரிஸ் பின் ஹஷ்ஷாம் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது தொடர்பாக எழுதப்பட்டுள்ளது. இவர் மக்காவில் அனைவரும் நேசம் கொள்ளக்கூடிய ஒரு தலைவராக இருந்தார். மேலும் அபூ ஜஹலின் தந்தை வழி சகோதரர் ஆவார். ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களின் சகோதரி அவரது மனைவியாக இருந்தார். மக்கா வெற்றியின்போது, இவரும் அப்துல்லாஹ் பின் அபீ ரபீஆவும் ஹஸ்ரத் உம்மே ஹானீயின் வீட்டிற்குள் நுழைந்து விட்டார்கள். ஏனெனில், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை கொலை செய்வதற்காக பின்னே வந்து கொண்டிருந்தார். ஹஸ்ரத் உம்மே ஹானீ (ரலி) அவர்கள் இருவரையும் தன் வீட்டில் மறைத்து வைத்து விட்டு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானார்கள். மேலும் நான் அவர்கள் இருவருக்கும் அடைக்கலம் வழங்கியுள்ளேன் என்று கூறினார்கள். அதற்கு இறைத் தூதர் (ஸல்) அவர்கள் உம்மே ஹானியிடம் எவருக்கு நீங்கள் அடைக்கலம் வழங்கியுள்ளீர்களோ அவர்களுக்கு நானும் அடைக்கலம் வழங்குகிறேன் என்று கூறினார்கள். (ஸீரத் ஹல்பியா, பக்கம் 133 - 134, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

ஹாரிஸ் பின் ஹஷ்ஷாம் கூறுகிறார்கள். நாங்கள் இரண்டு நாட்கள் அந்த வீட்டில் தங்கி இருந்தோம். பிறகு நாங்கள் எங்களது வீடுகளை நோக்கி சென்று விட்டோம். நாங்கள் முற்றத்தில் அமர்ந்திருந்தோம். எவரும் எங்களுடன் பகைமை பாராட்டவில்லை. எங்களுக்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் அச்சம் இருந்தது. கூறுகிறார்கள்: நான் போர்வையை போர்த்தியவாறு எனது வாசலில் அமர்ந்திருந்தேன். அப்போது திடீரென்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வந்து விட்டார்கள். அவர்களுடன் சில முஸ்லிம்களும் இருந்தனர். அவர்கள் ஸலாம் கூறி கடந்து சென்றுவிட்டார்கள். கூறுகிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) என்னை எல்லா இடத்திலும் இணை வைப்பாளர்களுடனே கண்டுள்ளார்கள். பிறகு எனக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய நன்மை, கருணை மற்றும் இரத்த உறவை பேணுவது நினைவிற்கு வந்தது. நான் அன்னாரை சந்தித்தேன். அச்சமயம் அன்னார் (ஸல்) மஸ்ஜித் ஹரமில் நுழைந்து கொண்டிருந்தார்கள். அன்னார் (ஸல்) என்னை மகிழ்ச்சியுடன் சந்தித்தார்கள். நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு ஸலாம் கூறினேன். மேலும் கலிமா ஷஹாதத் ஓதினேன். அதற்கு அன்னார் (ஸல்) எல்லாப் புகழும் உமக்கு நேர்வழி காட்டிய அல்லாஹ்வுக்கே உரியன ; உம்மைப் போன்ற மனிதர் இஸ்லாத்தை விட்டும் எவ்வாறு விலகி இருக்க முடியும்? என்றும் கூறினார்கள். ஹாரிஸ் கூறுகிறார்கள்: இறைவன் மீது ஆணையாக! இஸ்லாத்தை விட்டும் விலகி இருக்க முடியாது என்பதை நான் கண்டு கொண்டேன். (ஸீரத் ஹல்பியா, தொகுதி 3, பக்கம் 133- 134, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

அதே போன்று, ஸுஹைல் பின் அம்ர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட சம்பவம் இருக்கின்றது. இவரும் மக்காவின் தலைவராக இருந்தார். மேலும் இவர் ஹுதைபியா உடன்படிக்கைக்காக குரேஷியர்கள் தரப்பிலிருந்து பிரதிநிதியாக வந்தவரே ஆவார்.

ஸுஹைல் பின் அம்ரு கூறுகிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவில் நுழைந்தார்கள். மேலும் வெற்றி பெற்றார்கள். அப்போது நான் எனது வீட்டிற்குள் நுழைந்து கதவை மூடிவிட்டேன். நான் எனது மகன் ஹஸ்ரத் அப்துல்லாஹ்வை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில், அவர் முஹம்மது (ஸல்) அவர்களிடம் எனக்காக அடைக்கலம் வேண்டுவதற்காக அனுப்பி வைத்தேன். என்னை கொன்று விடுவார்களோ? என்ற அச்சம் எனக்கு இருந்தது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அன்னாருடைய சமூகத்தில் ஆஜரானார்கள். மேலும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனது தந்தை தங்களிடத்தில் அடைக்கலத்தை நாடுகிறார்கள் என்று கூறினார். மக்காவாசிகளுக்கு பொது மன்னிப்பு மற்றும் அடைக்கலம் வழங்கப்பட்டிருந்தது. உண்மையில் இவர் நிராகரிப்பாளர்களின் எப்படிப்பட்ட தலைவராக இருந்தார் என்றால், மேலும் எந்த அளவுக்கு கடும் எதிரியாக இருந்தார் என்றால், அவருக்கு திருப்தி ஏற்படவில்லை. மேலும் அவர் அடைக்கலத்தில் வந்துவிடுவார் என்று எண்ணவும் முடியவில்லை. மேலும் தனது அறிவற்ற சிந்தனைக்கு ஏற்ப அவரிடம் பழிதீர்க்கப்படும் என்று ஓர் அச்சம் இருந்தது. இதன் காரணத்தினால் அவர்கள் தனது மகனை மீண்டும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் அனுப்பி வைத்தார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், ஆகட்டும்! அவர் அல்லாஹ்வின் பாதுகாப்புடன் அடைக்கலத்தில் இருக்கின்றார். அவர் முன்னால் வரட்டும்; என்று கூறினார்கள். அதாவது சுதந்திரமாக வெளியே சுற்றித் திரியலாம். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தம் அருகே அமர்ந்திருந்த ஸஹாபிகளிடம், நீங்கள் ஸுஹைலை சந்தித்தால் குத்தி காட்டும் விதமாக பார்க்காதீர்கள் என்று கூறினார்கள். ஸுஹைலை போன்ற அறிவு படைத்த நேர்மையான மனிதர் இஸ்லாத்தை விட்டும் நெடுங்காலம் விலகி இருக்க முடியாது; அவர் எந்த விஷயத்தில் ஈடுபட்டிருந்தாரோ அது பயனளிக்கக் கூடியது அல்ல என்பதை கண்டு கொண்டார். அதாவது அவர் இருந்த நிராகரிப்பின் நிலையை.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) தமது தந்தையிடம் சென்றார்கள். மேலும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியதை அவர்கள் எடுத்துரைத்தார்கள். அதற்கு, இறைவன் மீது ஆணையாக! அன்னார் குழந்தை பருவத்திலும் நன்மை செய்யக் கூடியவராக இருந்தார். இந்த வயதிலும் நன்மை செய்யக் கூடியவராக இருக்கின்றார் என்று ஸுஹைல் கூறினார்.

ஹஸ்ரத் ஸுஹைல் (ரலி) பாதுகாப்பாக வெளியே வந்து செல்ல ஆரம்பித்தார்கள். ஹுனைன் போரில் அன்னாருடன் இணை வைத்த நிலையில் கலந்து கொண்டிருந்தார். ஆனால், அந்நேரம் இஸ்லாத்தை ஏற்றிருக்கவில்லை. ஹுனைன் போரிலிருந்து திரும்பி வரும்போது, ஜஃரானா எனும் இடத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். அது மக்காவிலிருந்து 27 கி.மீ தொலைவில் தாயிஃப் செல்லும் வழியில் அமைந்திருந்த ஒரு கிணறு ஆகும்.
(ஸீரத் ஹல்பியா, தொகுதி 3, பக்கம் 146, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு அவர்களிடத்தில் வியப்பிற்குரிய ஆன்மிகப் புரட்சி உருவாகி விட்டது. இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: மக்கா வெற்றியின்போது, குரேஷிய தலைவர்களுள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களில் ஸுஹைலை விட அதிகமாக தொழுகை மற்றும் நோன்புகளை பேணக் கூடிய மற்றும் ஸதக்கா வழங்கக் கூடிய மனிதர் எவரும் இருக்கவில்லை. அதிக அதிகமாக அழுது மன்றாடக் கூடியவராக இருந்தார். திருக்குர்ஆனை ஓதும் போது பெரும்பாலும் அழுது வந்தார். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

நான் ஹஜ்ஜத்துல் விதாவின்போது, ஸுஹைல் பின் அம்ரை பலி பீடத்தில் நின்றிருக்கக் கண்டேன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது குர்பானி ஆடுகளை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அருகில் வரச் செய்து கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது கைகளால் அவற்றை அறுத்தார்கள். பிறகு சிகை மழிப்பவரை அழைத்து தமது சிகையை மழித்தார்கள். கூறுகிறார்கள்: நான் ஸுஹைலை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது அருளுக்குரிய வெட்டப்பட்ட



Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 10 Thursday 04 -11 SEP 2025 Issue No.36 & 37

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

முடியை தனது கண்களில் ஒற்றியதை கண்டேன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது சிகை ஸுஹைல் அவர்களது கைகளில் வந்ததும், அதனை கண்ணில் ஒற்றிக் கொண்டார்கள். கூறுகிறார்கள்: அந்த நேரம், எனக்கு நினைவிற்கு வந்தது. இந்த ஸுஹைல்தான் ஹுதைபியா உடன்படிக்கையின்போது, உடன்படிக்கையில் எழுதவிருந்த "பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்" என்ற வாசகத்தை எழுத விடாமல் செய்தது. மேலும், முஹம்மது (ஸல்) என்ற வார்த்தையுடன் தூதர் என்பதை எழுதுவதிலும் ஆட்சேபனை செய்தார். மேலும் ரஸூலுல்லாஹ் என்ற வார்த்தையை அழிக்காத வரை அவர் உடன்படிக்கையை எழுத ஆரம்பிக்கவில்லை. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

நான் அல்லாஹுத்தஆலாவை புகழ்ந்தேன். அவன் ஸுஹைலுக்கு இஸ்லாத்தின் பால் வழிகாட்டினான். மேலும் வழிகாட்டியதுடன் பிறகு நன்றி மற்றும் விசுவாசத்தில் அளவின்றி முன்னேறினார்.

ஸுஹைல் பின் அம்ர் அவர்களின் மற்றுமொரு தீரச் செயல் கூறப்படுகிறது. அது என்னவென்றால், ஸுஹைல் குறைஷின் மிகச் சிறந்த சொற்பொழிவாற்றுபவராகவும் இருந்தார். இவர் பத்ரு போரில் காஃபிராக இருந்த நிலையில் முஸ்லிம்களுடைய கைதியாக ஆனார், அவர் தனது உதடுகளில் அடையாளம் இட்டிருந்தார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அச்சமயம் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடத்தில், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அடையாளம் இட்டிருக்கும் இவரது முன்பற்கள் இரண்டை எடுத்து விடுங்கள். இவர் தங்களுக்கு எதிராக ஒருபோதும் சொற்பொழிவாற்ற நிற்க முடியாது என்று கூறினார்கள். இவரது பல்லை எடுத்து விடுங்கள். வாயில் பல் இல்லை என்றால் சரியாக பேச முடியாது என்று கூறினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உமரே அவரை விட்டு விடுங்கள். விரைவில் அவர் நீர் புகழும் இடத்தில் நிற்கவிருக்கிறார் என்று கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவருக்கு தண்டனை வாங்கித் தர விரும்பினார்கள். ஆனால், ஒன்றும் கூற வேண்டாம்; அவர் ஒரு சந்தர்ப்பத்தில் எப்படிப்பட்ட இடத்தில் நிற்பார் என்றால், எப்படிப்பட்ட விஷயங்களைப் பேசுவார் என்றால், நீர் அவரைப் புகழ்வீர் என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

எவ்வாறாயினும், அவர் கூறுகிறார்: இந்த சந்தர்ப்பம் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மரணமடைந்தபோது, மக்காவாசிகள் கலக்கமுற்ற போது வந்தது. மக்காவாசிகள் முர்தத் ஆகுவதை குறைஷியர்கள் கண்டனர். மேலும் எப்படிப்பட்ட மோசமான நிலை ஏற்பட்டு விட்டது என்றால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தரப்பிலிருந்து மக்காவாசிகளுக்கு அமீராக நியமிக்கப்பட்ட ஹஸ்ரத் அத்தாப் பின் அஸைதீ உமவீ ஒளிந்து கொண்டார். எனவே அச்சமயத்தில் ஹஸ்ரத் ஸுஹைல் பின் அம்ரு சொற்பொழிவு ஆற்றியவாறு எழுந்து நின்றார்கள். மேலும் கூறினார்கள்:

குறைஷிகளின் கூட்டத்தினரே! நீங்கள் இறுதியில் இஸ்லாத்தை தழுவியுள்ளனர். இறுதியில் இஸ்லாத்தைத் தழுவி விட்டு, எல்லாரையும் விட முதலில் மார்க்கத்தை விட்டு விலகக் கூடியவர்களாக ஆகிவிடாதீர்கள். இந்த மார்க்கமானது நிலவும், சூரியனும் உதித்தது முதல் மறைவது வரை எவ்வாறு பரவுகின்றதோ அவ்வாறு பரவும்.

இவ்வாறு அன்னார் (ரலி) அதாவது ஸுஹைல் ஒரு நீண்ட சொற்பொழிவை நிகழ்த்தினார்கள்.

ஆக, இந்த சொற்பொழிவானது மக்காவாசிகளின் உள்ளங்களில் தாக்கத்தை ஏற்படுத்தியது. மேலும் மார்க்கத்திலிருந்து விலகுவதிலிருந்து அவர்கள் விலகி விட்டார்கள்.

ஹஸ்ரத் உத்பா மற்றும் முஅத்திப் ஆகியோர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது தொடர்பாக எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களிடமிருந்து இந்த அறிவிப்பு உள்ளது. மக்கா வெற்றியடைந்த நாளன்று அன்னார் (ஸல்) மக்காவிற்கு வந்ததும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னிடத்தில் உமது சகோதரி மகன்கள், அபுலஹபின் மகன்கள் ஆகிய உத்பா மற்றும் முஅத்திப் எங்கே? இருக்கிறார்கள்? நான் அவர்களைப் பார்க்கவில்லையே? என்று கூறினார்கள். ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் மற்ற இணை வைப்பாளர்களைப் போன்று ஒளிந்துள்ளார்கள் என்று கூறினார்கள்.ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களை என்னிடத்தில் கொண்டு வாருங்கள்; என்று கூறினார்கள். ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் சவாரி செய்து அரஃபாத்துக்கு அருகில் இருக்கின்ற ஒரு பள்ளத்தாக்கான உர்னாவுக்கு சென்றார்கள். மேலும், அவர்களை அழைத்து வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களுக்கு இஸ்லாத்திற்கான அழைப்புக் கொடுத்தார்கள். அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். மேலும் இருவரும் பைஅத் செய்தார்கள். பிறகு அன்னார் எழுந்து நின்றார்கள். அவர்களது கையைப் பிடித்து அவர்களை ஹஸ்ரத் அஸ்வத் மற்றும் கபாஅவின் கதவுக்கு இடையில் இருக்கின்ற பைஅத்துல்லாஹ்வின் சுற்றுப் பகுதிக்கு அழைத்து வந்தார்கள். அதனை தழுவி துஆ செய்வது நடைமுறையாக இருந்து வந்தது. அது துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு குறிப்பான இடமாக இருந்தது. மேலும் சிறிது நேரம் துஆ செய்தார்கள். பிறகு திரும்பி வந்தார்கள். அவர்களது முகத்தில் மகிழ்ச்சியைக் காண முடிந்தது. ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அல்லாஹ் தங்களை மகிழ்ச்சியாக வைப்பானாக. நான் தங்களது முகத்தில் மகிழ்ச்சியின் அடையாளங்களை பார்க்கிறேன் என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நான் எனது சிறிய தந்தையின் இரண்டு மகன்களை எனது ரப்பிடம் கேட்டிருந்தேன். அவன் எனக்கு வழங்கி விட்டான் என்று கூறினார்கள்.

பிறகு ஸஃப்வான் பின் உமையா இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட சம்பவம் உள்ளது. ஸஃப்வான் பின் உமைய்யா மக்காவின் தலைவரான உமைய்யா பின் ஹல்பின் மகனாக இருந்தார். அறியாமைக் காலகட்டத்தில் குறைஷிய தலைவர்களில் ஒருவராக இருந்தார். மேலும் குறைஷியர்களுள் பேச்சுத் திறமை கொண்ட மனிதர்களில் ஒருவராக இருந்தார். மேலும் இஸ்லாத்தின் கடும் எதிரியாக இருந்தார். இவர் மக்காவில் முஸ்லிம்களுக்கு துன்பமும், தொல்லையும் கொடுக்கக் கூடியவர்களில் ஒருவராக இருந்தார். பத்ரு போருக்குப் பிறகு இவர் ரஸூல் (ஸல்) அவர்களை கொலை செய்ய சூழ்ச்சியும் செய்தார்.மேலும் உமைர் பின் வஹப் என்பவனை இந்த வேலைக்காக ஆயத்தப்படுத்தினார்கள். எவ்வாறாயினும், இவரது பெயர் கொலை செய்ய கட்டளையிடப்பட்ட நபர்களுள் இருக்கவில்லை. ஆனால், இவர் சுயமே தான் கொல்லப்படுவோம் என்ற அச்சத்தில் மக்காவை விட்டு ஓடிவிட்டிருந்தார். இவர் செங்கடலின் பக்கம் ஜித்தாவை நோக்கி ஓடிவிட்டார். உமைர் பின் வஹப் இவரது நண்பராக இருந்தார். அவர் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டிருந்தார். இவர் ஸஃப்வான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை கொலை செய்வதற்காக மதீனா அனுப்பி வைத்திருந்த அதே நபராவார். மேலும் நீ அவரை கொன்று விடு! உனது குடும்பத்தை பார்த்துக் கொள்ளும் பொறுப்பு என்னிடத்தில் இருக்கும் என்று கூறி அனுப்பியிருந்தார். ஆனால்,

இதன் தொடர்ச்சி 9-ம் பக்கம்.....

National Watch Company

B. Mohamed Adil
93632 06679
99433 38000
Sales & Service
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172
O.A.N. Doors & Steels
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad